
அல்லைப்பிட்டிப்பதி

# அருளப்பர் அம்மானை

சத்தியசீலன்





# அல்லைப்பிட்டிப்பதி

# அருளப்பர் அம்மானை

யாத்து அமைத்தவர்

பாவலவன்
பண்டிதர் பா. சத்தியசீலன் (B. A. Hons)

# என் உரை

தந்தை இறைவனவன் தண்ணளியாய் வந்துதித்த மைந்தன்தான் யேசு — என்பது கிறீஸ்தவ மக்களின் நம்பிக்கை. வரலாற்றுக்குத் தெளிவான தேதியை வழங்கிய சரித்திர புருஷராகிய யேசு பெருமான், சட்டத்தின் கண்டிப்பையே சமயமாகக் கண்டவர்களை — சடங்காசாரங்களின் பகட்டாரவாரத்தையே சமய நெறியாகக் கொண்டவர்களை — பரிசேயர்களைக் கண்டித்தவர். குறைபிடிப்பதையே குணமாகக் கொண்ட குருக்கள் குலத்தவரான சதுசேயரைக் கண்டித்து, நீண்டமெய்ப்பைபுக்க குருக்களின் பொய்ப்பைக் கீண்டு எடுத்துக் காட்டியவர். பொறுத்தலின் புதிய நெறியாக நற்செய்தியை நானில மாந்தர் தமக்கு நல்கிய நம்பி யேசுநாதரின் முன்னோடியாகக் கொள்ளப்படும் தூயவரே அருளப்பர்.

அல்லைப்பிட்டிப்பதி அருளப்பர் அம்மானைப் பாட்டுடைத் தலைவராகிய இந்த அருளப்பர், அண்ணல் யேசுவுக்கே அருள்முழுக்குத் தந்தவர்; திருமுழுக்கு அருளப்பர் எனும் திருநாமத்தைப் புகழ்நாமமாகப் பூண்ட புனிதர். கிறீஸ்துவின் அருள்அரசுக்குக் கட்டியம்கூற வந்த இந்தத் தூயவர், கிறீஸ்துவைப் போலவே உண்மையினை ஓங்கி அறைந்தவர். விண்ணரசு அண்மிவரும் வியளத்தைச்

---

**ALLAIPIDDYPPATHY ARULAPPAR AMMANAI**

By

Pavalavan Pandit P. SATHIASEELAN, B.A. (Hons.)

Publisher : Mrs. KALADEVI SATHIASEELAN

"KALAIVANNAM"

Navaly South, Manipay. (Sri Lanka.)

First Edition : 3rd September, 1989

Copy Right Reserved with the Author

Price : Rs. 30 - 00

சொல்ல வந்த இந்த அர்ச்சியசிஷ்டவர் மண்ணரசன் ஏரோதை மண்டியிட மறுத்தவர்; ஏரோது அரசன், தன் தம்பி பிலிப்புடைய தாரத்தைக் கவர்ந்த தவறுதன்னைக் கண்டித்திடவும் தயங்கிடாதவர்; தண்டனையாகச் சிறையில் அடைக்கப்பட்டவர். இறுதியாக, தான் கட்டுரைத்த தரும நெறிக்காகத் தலைகொய்யப்பட்ட இக்கருணை மறவன் 'சத்தியத்தின் சாட்சி என ஓர்வேதசாட்சி என' நித்தியத்தைக் கண்டவர் — முத்திப்பேறு பெற்றவர்.

பிள்ளை ஒன்று இல்லையே என்று வருந்திய விருத்தாப்பியரான பெற்றோருக்கு ஆண்டவர் அருள்கூர்ந்து (அற்புதமாக) அளித்திட்ட பிள்ளை என்பதால் 'எஹோஹானன்' எனப் பெயர் சூட்டப்பட்டார் பிள்ளை அருளப்பர். 'எஹோஹானன்' என்ற எபிரேய மொழிச் சொல், 'ஆண்டவர் அருள்கூர்ந்தார்' என்ற பொருள்தருவது. எனவே இத்தூயவரின் திருப்பெயர் தமிழிலே அருளப்பர் என்றானது. (இராயப்பர் சின்னப்பர் யாகப்பர் என்பன போல.) அருள்வண்ணன் என்ற பெயர் அருளப்பருக்கு நான் புனைந்திட்ட திருநாமம் ஆகும்.

நான் பிறந்து வளர்ந்த சிற்றூரான அல்லைப்பிட்டியில் கோயில் கொண்டுள்ள அருளப்பர் மீது குழைந்த அன்பு காரணமாகவே இந்த அம்மானையைப் பாட முன்வந்தேன். ஆசையினால் நான் இந்த அம்மானை பாடுதற்குத் தேசுமிகும் அருளப்பர்தம் திவ்விய சரிதையும் என் தீந்தமிழ்க் காதலுமே தூண்டுதல்களாம்.

கலித்தாழிசை எனவும் கொச்சககலி எனவும் இனங்காணக்கூடியதாகத் தொடங்கிய அம்மானை யாப்பிலே, கதையின் விரைந்த ஓட்டத்துக்காகக் கலித்தளையின் விழுக்காட்டைக் குறைத்துள்ளேன். கதை கூறுதலாகவே அம்மானை முழுவதையும் அமைக்காது, ஏற்றபெற்றி, பாத்திரங்களின் நேர்கூற்றாக அமையும் நாடக பாணியையும் கையாண்டுள்ளேன். குறிப்பாக, யூததேய நாட்டு வளத்தைத் தமிழ்நாட்டு வளமாகவே கற்பனை செய்துள்ளேன். இந்நூலின் கதை அமைப்பையும் கருத்து அமைவையும் முன்வந்த நூல்களுக்கும் எமது சமய நம்பிக்கைக்கும் முரண்

படாத வகையில் அமைத்திடும் அதே நேரத்தில், எனது ஆக்கக் கற்பனையையும் கட்டுப்படுத்த முடியாத கவிஞ கவே இந்த அம்மானையை யாத்தமைத்தேன்.

இத்தாலியரான துறவி ஒருவர் தன் தமிழ்க் காதல் காரணமாக யூதகுல மாது மரியாளை 'மைத்தடங்கண் மணமகளிர் கோலம்போல்' வனப்பெய்த வைத்ததை — ஒட்டியாணம் முதலிய மணஅணி அணிந்து அழகு பார்த் ததை எந்தத் தமிழ் ஏற்றதோ — வரவேற்றதோ, அந்தத் தமிழ், இந்தத் தமிழின் இயலையும் இசைப்பையும் ஏற்றிடும் என்பது எனது எதிர்பார்ப்பு. வேதங்களிடையே பேதங்கள் காணாத பொதுமை எமது தமிழின் பெருமை. அந்தத் தமிழுக்கு எனது இந்தச் சந்தத் தமிழ் ஒரு சமர்ப்பணம்.

இந்நூலுக்கோர் அழகிய புகழாரத்தைப் புனைந்திட்ட பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள் என்றுமே என் ஆக்கத்தின் ஊக்கி ஆனவர். அவர்களுக்கு என் நன்றி கள். வீண்சரவை ஏன் என்று விலகாது, இந்நூல் முழு வதுக்கும் சரவைதிருத்தி உதவியதோடு, எனது உழைப்பி பிலும் களைப்பிலும் உற்ற துணை ஆகிய கலைஞர் நவாலியூர் நடேசன் அவர்களுக்கும், அழகாக அச்சேற்றித்தந்த அச் சகத்தினருக்கும் எனது நன்றிகள்.

## -- படையல் --

'நேசநாயகன் என்னும் அருள் தேசிகன்' என் பாலர்பா ஆக்கங்களை ஊக்கி வளர்ப்பவர். அவர் ஆசியுடன் ஆக்கிய 'பாட்டு விளையாட்டு' என்னும் பாலர்பா ஏட்டினை நான் காட்டும்பொழுது எந்தன் கைகுலுக்கிப் 'பாவலவா! தீட்டுக ஓர் தூயவரைத் தீந்தமிழில்' என்று என்னைக் கேட்ட வருக்கே இந்நூலைக் காணிக்கை ஆக்குகிறேன்.

அவர்தாம்:

செம்மனத்தான்; தண்ணளியான்; செம்பாதி என்பெயரைத்
தம்மகத்தே கொண்ட 'அருள்தந்தை ஜெயசீலன்'

— சத்தியசீலன்

# அல்லைப்பிட்டிப்பதி

# அருளப்பர் அம்மானை

## காப்பு

### வெண்பா

முப்புறமும் கத்துகடல் முத்தமிடும் என்னூரைச்
செப்பமுறக் காத்தருளும் செய்ய அருள்-அப்பர் மேல்
ஆசையினால் நான் இந்த அ[illegible]தி பாடுதற்கு
யேசு மரி சூசை துணை.

### விருத்தம்

தரங்கம் பாடித் தமிழ் சொல்லும்;
 'தாயே' என்றே பொருள் சொல்லும்.
மருங்கே சூழ்ந்த வயல் எங்கும்
 'மாதா' என்றே கதிர் சாயும்.
ஒருங்கே பனையின் குருத்தெல்லாம்
 உன்னைப் பார்த்தே புன்னகைக்கும்
கரங்கள் கூப்பித் தொழுகின்றோம்,
 காப்பு உத்தரிய மாதாவே.

## வெண்பா

'தம்பி பிலிப் தன்னுடைய தாரத்தை நீகவர்தல்
வம்பு' எனவே வாதிட்ட வண்ணனைஎன் —
அம்பாவாம்
அம்மானை பாடி அடிதொழ அல்லைப்பிட்டிச்
சம்பிலிப்பு நேரி சரண்.

அந்தோனி என்றபெயர் தாங்கும் அடியான் என்னை
இந்தநே ரத்துன் இருகரமும் — வந்தணைக்க
பாலைதீவு அந்தோனி யாரே! பதம் பணிந்தேன்
சீலனே! செந்தமிழைச் சேர்,

மானிப்பாய் அந்தோனி யாரே! மனங்கனிந்து
நானிப்போது ஆக்கும் நறுந்தமிழ்தான்—'தேனப்பா
பண்டிதர்க்குப் பாமரர்க்கும்' என்ற பெயர் எடுக்க
தெண்டனிட்டேன் நின்னடியைத் தேர்ந்து.

## அம்மானை

புனிதா! அருளப்பா
உன்றன் புகழ்ச்சரிதை
இனிதாய் அமைந்திடவே
எழுதுகோல் தந்திடய்யா!

கத்தியினைக் கண்டும்
கலங்காது அறம் உரைத்த
சத்தியனே! நானும் அது
சாதிக்க வந்திடய்யா!

தீவகத்தின் வாயில் எனத்
    திகழ் அல்லைப் பிட்டிதனில்
கோயில் கொண்ட சற்குருவே!
    கொடியைப் பிடித்தவனே!

பற்றுமிகும் என்தீவுப்
    பற்றில் ஒரு சிற்றூரான்;
கற்றவர்முன் கல்லாதான்.
    காதல் அது நில்லாதே
ஒற்றை எடுத்தேன். இனி மேல்
    உன் அருள்தான் என் பொருளே!

( அவையடக்கம் )

என்றே என் கைகூப்பி
    ஏடு எழுது கோல் எடுத்து
நன்றே நினைந்தவனாய்
    நல்லோர் உமை வணங்கிச்

சந்தத் தமிழ் எழுதச்
    சத்தியசீலன் துணிந்தேன்,
வந்தக் கடலை ஒரு
    வள்ளத்தால் அள்ளுதல் போல்!
'பந்தினைப்போலே உலகம்
    பார்' என்று காட்டுதல்போல்!

( தமிழ்த்தாய் முன்னிலை )

பந்தம் அறுத்தவன்மேல்
    பாசங் கடந்தவன் மேல்
அம்மானை பாடவந்தேன்
    அம்மா தமிழ்த்தாயே!
சும்மா வந்து, என்னுடைய
    பாட்டில் சுகந்தருவாய்.

# யூதேயாவின் சிறப்பு

காதைத் தலைவன், இறை கருணையிலே பூத்தவனும்
போத சஞ்சுவாம் முனி இப் பூதலத்தே பாலன் என
வந்து பிறந்த இடம் வளமாரும் யூதேயா.

இந்த உலகினிலே இறைவன் தன் மக்களுக்குச்
சொந்த இடம் சந்த இடம் என்று அன்று தந்த இடம்
ஆனை செல்வ மெல்லாம் அமைந்திட்ட கானானும்

கானான் தேசத்திலுள்ள காமர் வள நாடுகளில்
மோனை என வாய்த்ததுதான் (மூத்ததுதான்) யூதேயா!

மெத்து புகழ்க் கானானில் மேவியுள்ள நாடுகளில்
உத்தமராம் யாக்கோப்பின் புத்திரரில் மூத்தவனும்
யூதாவின் சந்ததிக்கு யோசுவா தன் கையாலே
நீதகலப் பங்கிட்ட திருவிடமே யூதேயா.

அப்பதியை, முற்பதியை ஆர்புகழ நான் எழுத?
செப்பு பழம் ஆகமங்கள் செய்தி தர வல்லனவே.

கடவுள் தெரிந்தெடுத்த கற்புடைய மக்களுக்கோர்
இடமாய்க் கிடைத்த இடம். இறைதெரிந்த தூயதலம்.

ஆபிரகாம் தாம்மகிழ அவர்தம் மரபினர்க்குத்
தேவன் பிரியமுடன் தெரிந்து வழங்குமிடம்.

பாலும் தெளி தேனும் பாயும் இடம் என்று சொல்லி
நாலு திசையாரும் நயக்க எசித்திருந்து
மோசேஸ் தலைமகனூர் இசுறுயேல் புத்திரரைக்
கூட்டிவந்து காட்டிக் குடியேற்ற வந்த தலம்.

''மாநிலத்து மீட்பன் பிறந்துவரும் நாள்மட்டும்
மேனிலத்தில் உன்மரபை விட்டரசு நீங்காது.
யூதா! தலைமகனே!'' என்று அன்று யாக்கோப்பர்
ஓதிய சொல் தப்பாமல் உயர்ந்தோராம் பன்னிருவர்
மேதினியிலே, அரசு மேவி இருந்து ஆண்ட இடம்.

மறைவாகப் பின்நடக்கப் போகும் நிகழ்ச்சிகளை
உறமுன் அறிவிக்கும் இறைவாக்கினர் பலரும்
பிறந்து சிறந்த இடம் என்று பேர் பெற்ற தலம்.

தாவீதின் புத்திரனும் தாரணியை ஆண்டவனும்
ஞானத்துக் கோர் அரசன் சாலமோன், வண்ணமுடன்
வானத்து இறைவனுக்கு இவ் வையத்திலே, அமைத்த
ஆலயம் நின்று, அருளை அள்ளிச் சொரியும் இடம்.

பாவிகளை மீட்கவரும் பரமன் திருக்குமரன்
தேவி மரி யாள், சுதனைத் தேடிப் பிறந்த தலம்.
என்றே பல படைச் சீர் ஏற்றதலம் பாரும் என்று
நன்றிதனை நான் நிறுத்தி நாட்டுவளம் தானுரைப்பேன்.

பூவில் பொறிவண்டு போய்நல் நறவுண்டு
நாவில் தமிழ்கண்டு நாதஸ் வரம் உண்டு!

கூவும் குயில் உண்டு கொஞ்சும் கிளி உண்டு,
மாவின் தளிர் உண்டு. மகிழும் பொழுதுண்டு.

வானக் கடல் எங்கும் வண்ணப் பிறை தொங்கும்,
மீனக் கடல் ஆங்கே மேவும் அது தங்கம்!

தூவல் சொரிகிறது; பூவும் விரிகிறது,
சேவல் பெடையுடன், தேன் சிட்டும் பறக்கிறது.

வானம் இடிக்கிறது; மணல் நீர் குடிக்கிறது.
மானும் நனைகிறது. மயில் ஏன் களிக்கிறது?

கானமயில் ஆடிடவே வானமழை தான்பொழியும்.
ஞானமது தான் எனவே நாடிப் புனல் பெருகும்.

பள்ளவயல் பார்த்தந்த வெள்ளம் மெள் ளப்பாயும்.
கள்ளரைப்போல் ஏறி, அணைக்கட்டில் குதித்தோடும்.

சீதப் புனல் ஆட்டிச் செய்த பவம் ஓட்ட
யோர்தானி லேலவருவார் யோவான் என அறிந்தோ
கார்தான் பொழிந்திட்ட கனத்த மழை தந்த
நீர்தான் பெருகி அந்த யோர்தானி லே நிலக்கும்!

பொங்குகிற பூம்புனல்தான் 'பூம்புனல்' என்,னும்படியாய்
கொங்கலர்பூஞ் சோலையினைக் கொள்ளை கொண்டே ஓடிவரும்!
செங்கடலைக் கூடத்தான் சேர்ந்து வெளுப் பாக்கியதாம்!
அங்கந்த உப்புக் கடலின் உவர் போக்கியதாம்!

பாக்குகளைத் தான்பறித்தே பாளை வெறிதாக்கி
தேக்கெறிந்து மாஎறிந்து தூக்கி அங்கே ஓடியதாம்.
பள்ளக் கமலங்கள் பார்க்கப் புனல் பெருகி
அள்ளற் பழனத்தை ஆழிக் கடலாக்க.....
சேற்று வயல் தாம் உழக்கி நாற்று நடும் மள்ளர் அங்கு
போற்றி வைத்த நெற்பயிரைப் போல் வளரு தே, குவளை!
களைதான் களைகிறவன் கருங்குவளை தான்களையான்,
வளைதான் அணிந்த 'அவள்'' வண்ணவிழி ஆம் எனவே!
சுளைதான் வகிர்ந்தெடுத்து மந்திக்கு அருத்துவன
அழையா விருந்துகளாய் அங்கு வரும் வானரங்கள்
காதல் கடுவனது கண்ணியத்தைக் கண்டங்கு
மாதர்முகம் போற்சிவந்தே மலரும் செந்தாமரைகள்!
வேரில் பழுத்த பலா வெட்டவில்லைத் தான் வெடிக்கப்
பூரித்த மந்தி நின்று புன்னகைக்கும் யூதேயா!

கார்முகில்கள் தாம் எனவே கண்ணுறங்கும் மேதிகளை
கார்முகில்தான் நீராட்டும் காட்சிபெறும் யூதேயா!

கண்விழித்த மேதிகள்தாம்! கரும்பைக் கடித்துதற
மண்மகள் மேல் முத்துதிரும் மாவளஞ்சேர் யூதேயா!

முத்தெடுத்துக் கோத்திடத்தான் முந்துகின்ற மந்திகளை
சத்தமிட்டுத் தான் அழைக்கும் சாலி விளை யூதேயா!

வளர்த்த பயிர் வெட்ட, அரி வாளெடுத்தே வந்தவர்கள்
களைத்தே விழும்வரையும் கதிர்குவிக்கும் யூதேயா!

செய்குன்றைப் போல்நிமிரும் செந்நெற்போர் தாம், உயர்ந்து
மை வானை எட்டி, மதி முட்டி நிற்கும் யூதேயா!

மாடுகட்டிப் போரடிக்க மாட்டாமல், காட்டகத்தே
கூடிநிற்கும் யானைகளைக் கொண்டுவரும் யூதேயா!

பொலியோ பொலி என்று போரடிக்கப் போகையிலே
மலையோ மலை என்று யானைவரும் யூதேயா!

நெல்லு மணி கொழிக்க நேரிழையார் நிற்கையிலே
நல்ல மணி அடித்தே யானைவரும் யூதேயா!

தும்பிக்கை யால் நெல்லைத் தூற்றும் சுளகெடுத்துத்
தம்பிக்குக் காட்டுகிற தயைமிகுந்த யூதேயா!

சுளகை எடுக்கையிலே தேவனது நீதியையும்
அழகாய் நினைக்கின்ற அறமார்ந்த யூதேயா!

பத்து விரல்களினால் கொத்தைப் பிடிக்கையிலும்
பத்துமுழுக் கற்பனையின் படி நடக்கும் யூதேயா!

சின்ன மணி அதனைச் சேர்த்தெடுக்கும் வேளையிலும்
மன்னுவை எண்ணி எண்ணி மக்கள் தொழும் யூதேயா!

சத்தியஞ்சேர் சஞ்சுவாமின் சரிதம் எனும் அந்த
வித்து முளைத்தெழுந்த விளையல்தான் யூதேயா!

# அருளப்பர் பிறப்பின் அறிவிப்பு

காலஞ்சு மூன்றுவரக்
  காணுனின் யூதேயா
மேலேஉ ரோமரினுல்
  மேற்கொள்ளப் பட்டதடா!

புதுமை! புதுமை இது!
  யூதேய தேசமதை
இதுமேயர் தம் குலத்தோன்
  ஏரோதன் ஆளுகிறுன்!

சீராரும் யூதேய
  நாட்டை உரோமருக்காய்
ஏரோ தரசன் இருந்து
  ஆண்டுவரும் அந்நாளில்:

அபியாவின் கோத்திரத்தில்
  வந்துதித்த தேசிகராம்
செபதபத்தில் மிக்கவராம்
  செம்மை மனம் கொண்டவராம்.

சேருசலேத்தே வாலயத்தில்
  சேர்ந்தபணி தாம்புரிந்து
வருகின்ற சக்கரியா
  எலிசபெத்தை தன்னுடைய

இல்லக் கிழத்தி என
  ஏற்று இணேந்து வாழ்ந்தாலும்
நன் மக்கட் பேறிலராய்
  நைந்து மனம் நொந்தனர்காண்!

சிந்தா குலம் இதுதான்
சிந்தையிலே போய்வலிக்க
நொந்துருகி நின்று, அவர்தாம்
நோன்பும் பலநோற்று...

''தந்தை இறை வா! எமக்கோர்
தநயனைத் தா! தா!'' என்றே
எந்தநே ரத்தும் அவர்
இரந்து முறையிட்டனர்காண்

இந்தவா றுய் அந்த
இருவருமே மூப்படைந்து
தள்ளாப் பருவமதில்
தனிமையுடன் வாழுகையில்......

சீட்டு விழுந்து அன்றொருநாள்
செருசலையிலே தூபம்
காட்டுதற்காய்ச் சக்கரியா
ஆலயத்துட் சென்றாராம்!

கோவிலுக்குச் சென்ற
குருவான சக்கரியா
தூபத் தைக் காட்டி அங்கே
தொழுதுநிற்கும் வேளையிலே

'துண்' என்று சக்கரியா
முன்னர் ஒரு தோற்றம்!
கண்மின்னும் ஜோதியுடன்
கனவே போல் ஓர் உருவம்!
விண், நின்று இறங்கிவந்த
கபிரிகேல் தூதன் அவன்!

''சக்கரியா! உந்தனுக்கோர்
சான்றோன் மகனைத்
தக்கான்! உனது
தலைவி எலிசபெத்து

மெய்யுளைந்து தான் சுமந்தோர்
மேலவனைப் பெற்றிடுவாள்.
ஐய, அந்தப் பிள்ளைக்கும்
அருளப்பன் என்ற பெயர்
சூட்டிடுவாய் நீ'' என்று
சொல்லி நிற்கும் வேளையிலே
கேட்டு அங்கு நின்றிட்ட
சக்கரியா, நக்கவராய்,

''நானும் ஒரு கிழவன்!
எனது மனைக்கிழத்தி
தானும் முதியவளாம்!
எனவே எமக்கிந்தத்

தள்ளாத வயதினிலே
பிள்ளை பிறக்கும் என
விள்ளுகின்ற உம் முறைதான்
வியப்பே தருகிறது!''

என்று இறைவன் தூதனிடம்
எடுத்துரைக்கத் தான்கேட்டு
கன்றும் சினத்துடனே
கபிரிகேல் தான் மொழிவார்

''ஆண்டவரின் வார்த்தை இது
ஐயம் என்ன சக்கரியா?

ஈண்டு இந்தச் செய்தியினை
எடுத்து வந்தேன் சக்கரியா!

தந்தை இறைவனவன்
தானனுப்ப உம்மிடத்தில்
வந்த கபிரிகேல் என்
வாய்மை பெறும் வார்த்தையில் நீர்

சந்தேகம் கொண்டதினல்
இந்தத் தினம் தொடக்கம்
நாமுரைத்த பிள்ளைக்கு, அந்
நாமத்தைச் சூட்டுமட்டும்
ஊமையாய்த் தானிருப்பீர்''
என்றுரைத்துப் போனுர் காண்.

## மரியாய் மங்களம் பெறுகிருர்

இவ்வண்ணம் ஆலயத்தின்
உள்ளே நிகழ்ந்ததனைச்
செவ்வண்ணம் தேராது
வெளியே இருந்தவர்கள்
பேச்சிழந்து சக்கரியா
ஆச்சாரி வந்ததுகண்டு
ஆச்சரியப் பட்டார்கள்!
அஞ்சினர்காண் அம்மானை!
தந்தை இறை தூதன் அவன்
தமிழ்செய்த வாருக

அந்த எலிசபெத்தோர்
 ஆண்மகனைக் கர்ப்பமுற்றே
ஆறு மாதங்கள் இங்கே
 ஆக ... அவள் மைத்துனிதான்
பேறு நிறைந்தவளாம்
 பிரியமுள்ள பத்தினியாய்
நீதிமான் சூசையுடன்
 நேயமுடன் வாழ்பவளாம்
'மாதா', என இந்த
 மகிதலத்தோர் தாம் வணங்கும்
ஏது நிகழ்ச்சிக்கு
 இடன் ஆன பேரி எனும்
மாதரசி முன்னே அக்
 கபிரிகேல் தூதன் போய்:

''மரியாயே! வாழிய நீ!
 மங்கையரின் மத்தியிலே,
தெரிவான அன்னையும் நீ!
 தேவசுதன் உன்வயிற்றில்
வருவான் மகன் எனவே!
 வரங்கள் நிறைந்தவளே!
ஆண்டவர் உம் மோடம்மா
 அருளம்மா'' என்று சொன்னார்.
தூதன் உரைகேட்டங்குத்
 துணுக்குற்ற மேரி அம்மா
''கணவன் துணை அறிவேன்
 கன்னி நான் இன்னும் அந்தக்

கணவன் உறவறியேன்;
கடவுள் இதை அறிவார்.
கொள்ளும் கணவன் இலாக்
கோதை வயிற்றில் ஒரு
பிள்ளை பிறக்கும் என
விள்ளுவதும் எவ்வாறும்?''
என்று நிலம் பார்க்கையிலே
எதிர் நின்ற காபிரிகேல்
''ஒன்றும் வியப் பில்லை
உது தேவ சித்தம் அம்மா''
என்று சொல்லி ''உன்மதனி
எலிச பெத்தம் மாள்கூட
இன்று ஒரு தாய், ஆம் அவளுக்கு
இது ஆறும் மாதம்'' என்றூர்.
ஆண்டு, அந்த மேரி அம்மா
அமைச்சல் உடன் அக்கணமே
''ஆண்டவர்க்கு நான் அடிமை
ஆமே'' என மொழிந்தாள்!

வேண்டிய அத் தூதனுந்தான்
விடை பெற்றுச் சென்றவுடன்
அரிய நிகழ்ச்சி இதை
அன்புடைய மைத்துனியாய்
யூதேயா வில் வாழும்
எலிசபெத் துக்குரைக்க
மாதேவன் தாய் — மரியும்
மனங் கொண்டாள் அம்மானை.

பாதங்கள் நொந்திடவும்
பாலை வழிதனிலே
வேதனவன் தாயார்
விரைந்தனள் காண் அம்மானை.

போது அங்கு பூவாகும்!
புல்லெல்லாம் கம்பளமாம்!
ஏதங்கள் இன்றி
வழி நடந்தாள் அம்மானை.

கல்லும் கனிந்துவிடக்
கானல் அதே நீராக
வல்ல இறைவனின் தாய்
வழி நடந்தாள் அம்மானை.

நீலக் குயில் அங்கு
நினைந்து தமிழ் பாடக்
கோல மயில் அங்கு
கூத்தாடிக் கொண்டிருக்கப்

பூக்களிலே வண்டு
புதிது உண்டு பண் எடுக்கப்
பாக்களிலே வந்த
பசிய தமிழ் எங்கள்

நாக்கில் இனிப் பதுபோல்
நறுஞ்சுனைகள் தாம் ஊற
தேவனது தாயர்ர்
தெருவழியே தான் நடந்தார்.

வாக்கின் வடிவான
வல்ல இறை சுதனுர்

யாக்கை எடுத்திடவே
தேர்ந்துள்ள மேரி அம்மா

மாலை வரும் முன்பே
மைத்துனியின் வீட்டுக்கு
பாலை வழி நடந்து
வந்து விட்டார் அம்மாளை.

மைத்துனியைக் கண்ட
மகிழ்ச்சியினால் மேரி அம்மா
கைத்தலத்தில் தாங்கி
கடவுளையும் தாம் புகழ்ந்தாள்.

"தந்தை இறைவன் அவன்
தண்ணளிதான் உன் வயிற்றில்
மைந்தன் என வந்ததம்மா.
மலடி எனப் பட்ட உனை

எந்தை இறைவன் அவன்
இப்படியோர் தாய் ஆக்கி
வல்லமையைக் காட்டிவிட்டார்
வாழ்த்துவம் நாம்" என்றாளே.

கண்களிலே நீர் ததும்பக்
காதினிலே தேன்பாயப்
"பெண்களிலே பேறுடைய
பெருமகளே" என்று சொல்லிப்

புகழும் எலிசபெத்துப்
"புனிதை மரியாளே!
வல்ல இறைவனின் தாய்
வாழ்த்திப் புகழ்ந்திட, என்

இல்லம் புகுந்திட நான்
என்ன தவம் செய்தேனோ?

உன் அதரத்தின் வழியே
உதிருகிற சொற்கேட்டு

என் உதரத்தில் இருக்கும்
பிள்ளை மகிழ்ச்சியினால்

துள்ளியதே! சென்ம பவத்
துடக்கினையும் நீக்கியதே''

என்று புகழ்ந்திருக்க ...
இந்நிலையில் அன்னைமரி

ஒன்றி, அருளோடு
உணர்வின் வயமாகி :

''என்னுடைய ஆத்துமமோ
இறைவனையே போற்றுதடி!

அன்னவனின் அன்பில் என்றன்
ஆன்மா கிறங்குதடி!

தாழ்ச்சி யுடனிருந்த
தம்மடியாளைத்தேவன்

மாட்சிப் படுத்தினர்காண்!
மாதாவே ஆக்கினர் காண்!

இன்று தொடக்கம் எனை
இறைவனது தாயாரே

என்று மகிதலத்தோர்
இணங்கி வணங்குவர் காண்''

என்று பல மொழிந்தார்;
இறை அருளைத் தான் வியந்தார்.

நன்று பெறு மாமரியும்
நயந்து பணிவிடைகள்
செய்யும் படியாகத்
திங்கள் மூன்று அங்கு தங்கி.
மெய்யன்பி னோடே
பணி புரிந்தார் அம்மானே.

## அருளப்பரின் பிறப்பும் அதிசயமும்

காபிரிகேல் தூதனவன்
கட்டுரைத்த வாறுக
தேவி எலிசபெத்தும்
திப்பியமாய்க் கர்ப்பமுற்றுத்

திங்கள் ஒன்பதும் நிறையத்
திருவருளின் பேறுக
மங்களமாய் ஆண்மகவைப்
பெற்றேறே மகிழ்ந்தனள் காண்!

எட்டாம் நாள் ஆண்குழந்தைக்கு
இயல் விருத்த சேதனத்தில்
சுட்டும் பெயரதனைச்
சொல்லும் படிகேட்க ...

அன்னை அகமகிழ்ந்தே
அருளப்பன் என்ற பெயர்
என் மகனுக்கு ஏற்றபெயர்
என்றே விடை பகர்ந்தாள்.

அப்பெயரைக் கேட்டவர்கள்
அதிசயித்தே நின்றனர்காண்.
'இப்பெயர் உன் சந்ததியில்
எவருக்கும் இல்லை' என்று

மூப்பர் மொழிந்து ''ஐயா
மூதியவரே! சக்கரியா!
யாப்புற உன் பிள்ளைக்கு
யாது பெயர் என்று எழுதிக்
காட்டும்'' எனக் கையில்
கற்பலகை தான் கொடுத்தார்.

கற்பலகை மீதில்
அருளப்பன் என்கின்ற
நற்பெயரைத் தானே
அவரும் எழுதினர் காண்!

அந்தக் கணமே
அவர் நாவின் கட்டவிழ
மைந்தன் யுவானி
மலர் முகத்தைத் தான் பார்த்தே
ஆவியினால் ஆட்கொள்ளப்
பட்டவராய்த் தாம் மொழிவார்.

''தூவி அனமே!
துளி அமுதே! உன்னுடைய
பூவாய் இறைவன்
புகழைத்தான் சொல்லுமடா!.

நீயோ என் பாலகனே!
உன்னதரின் முன்னோடி

ஆயே பிறப் பெடுத்தாய்!
அதற்காம் பணிகளையே

செய்திடுவாய்! சேசு எனும்
செய்யான் வரும் வழியை
ஐயா நீ தான் மெய்யாய்
ஆயத்தம் செய்திடுவாய்

ஆண்டவர் எம் மீதே
அருள்கூர்ந்தார் ஆதலினல்
வேண்டும் பெயரும்
அருளப்பன் என்றிருத்தல்
சாலப் பொருத்தம்'' எனச்
சாற்றிய அச் சக்கரியா

ஆலயத்தில் அன்று
நடந்திட்ட அற்புதத்தை
எல்லோர்க்கும் கூறி
இறைவனது வல்லமையைச்

சொல்லிப் புகழ்ந்திடவே
சூழ்ந்து நின்றோர் தாம் வியந்து
பாலன் இவன் வளர்ந்து
வாலன் என வாழுகையில்

ஞாலத்தில் என்னென்ன
நடந்திடுமோ நாமறியோம்
என்று புகழ் சொன்னவராய்
ஏகினர் காண் அம்மானே.

# மாநில மீட்பரின் பிறப்பும் மூவரசரின் பயணமும்.

முன்னோடி இப்படியாய்
முன்பிறந்து தான்வளரப்
பின்னோடி வந்திட்ட
யேசுப் பெருமகனும்
மந்தைகளின் மத்தியிலே
மரிசுதனாய் வந்துதித்தார்.

அந்த நிகழ்ச்சியினை
அற்புதமாய்த் தான்குறிக்க
நட்சத் திரம் ஒன்று
நவமாகத் தோன்றியதாம்.
பட்சத் துடன் அதனைப்
பார்த்திட்ட மூவரசர்
மண்ணவர்தம் மீட்பர்தமை
மண்டியிட்டுத் தாம் வணங்க
கண்ணனில் ஒளி கீழ்த்திசையில்
காட்டும் உடுவைத் தொடர்ந்தார்.

ஏரோதன் ஆளுகிற
எருசலேதான் வந்தவுடன்
பார்வையில் அவ் வெள்ளி
படாதே மறைந்ததுகாண்.

வெள்ளி மறைந்தவுடன்
வேறு வழி இல்லாமல்

கொள்ளும் அந்த ஏரோதைக்
கும்பிட்ட மூவரசர்

யூதரது ராசாவும்
எங்கே பிறந்துள்ளார்?
ஓதரசே! என்றந்த
ஏரோதைக் கேட்டாராம்.

வேதமொழி வாணரிடம்
விளக்கத்தைக் கேட்டு, அரசன்
'யூதரது ராசாவும்
பெத்தலையில் தான்பிறப்பார்'
என்று எழுதி உள்ளது' என
இராசர்க்கு எடுத்தியம்பி
நன்று நன்று கீழ்த்திசையின்
ஞானிகளே! நீங்கள் இன்று
சென்று அவனைக் கண்டே
செபித்தபின்னர் மீண்டும் இங்கே
என்னிடத்தில் வந்துசொல்வீர்
ஏனென்றால், யூதரது

மன்னிடத்தே நானுந்தான்
மாருத அன்புடையோன்
என்றந்த ஏரோதன்
எடுத்தியம்ப, மூவரசர்
சொன்ன மொழியிலுள்ள
சூழ்ச்சியதைத் தேராமல்
மீட்டுமே வெள்ளி
வழிகாட்ட ஓர் சிறிய

மாட்டுக் கொட் டில்தனிலே
மாநிலத்து மீட்பர்தமைக்
கண்டே வணங்கிவிட்டுக்
காதலுடன் மீண்டும் போய்
விண்டுரைப்போம் மன்னனிடம்
என்று துயில் கொள்ளுகையில்...

'சூதாக ஏரோதன்
சொல்லினன் மன்னவரே!
பாதகனை மீட்டும் போய்ப்
பாராதீர்' என்று அவரின்
சொப்பனத்தில் தேவனது
தூதனவன் சொன்னதினல்
அப்படியே மூவரசர்
வேறுவழி சென்றனர் காண்.

எண்ணம் நிறைவேறு
ஏரோதன், தன்னுடைய
கண்ணில் பொறிபறக்கக்
கர்ச்சித்துத் திட்டமிட்டே
"ஆண்டிரண்டுக் குட்பட்ட
ஆண்குழந்தை அத்தனையும்
பூண்டோடு அழியும்" எனப்
பொல்லாத ஆணையிட்டான்.
"பாதகன் ஏரோதன்
பணிப்பாலே உங்களுக்கு
ஏதம் விளைய
இருக்கிறது சூசையரே!
இப்பொழுதே போங்கள்
எசித்துக்கு" எனக்கனவில்

செப்பும் ஒலி கேட்டதனுல்
சேசுவை அச் சூசையப்பர்
காப்பாற்றி விட்டாரே!
காதகனும் ஏரோதன்
பூப் போற் சிசுக்களேத்தான்
போய் வெட்டிக் கொன்ருனே!

## ஏரோதனின் தண்டனேக்குத் தப்பித்து எலிசபெத்தம்மாள் பாலசஞ்சுவாமைக் கொண்டு பாலேவனம் ஏகல்.

ஏசுஎனும் ஆண்குழந்தை
எசித்துக்குத் தப்பிவிட்டார்.
பேசுயுவாம் பிள்ளேயனே
பெரும் இடர்தான் பட்டானே!

தந்தை இறந்ததினுல்
தாய் எலிச பெத்தம்மாள்
மைந்தனேக் காத்திடவே
மனவுறுதி கொண்டாராம்.

மாதம் பதினெட்டு!
மலர்போற் குழந்தையது
பாதங்களேத் தொட்டுப்
பார்த்துப் பரிதவித்து

வேதம் புகழ்சொல்ல
வே, சென்ம பாவம் எனும்
ஏதம் தனைநீக்கி
இங்கே பிறந்தவனை

காதகனும் ஏரோதின்
காவலர்கள் காணமுதல்
மாது எலிச பெத்துத்தான்
மார்போடு உற அணைத்தே

ஓலம் பெருக, அங்கே
உதிரமும் தான்பெருகப்
பாலனவன் கண்டு
பயந்தழவே தான் நடந்தாள்.

ஆதி பிதா! என்னுடைய
அன்பான புத்திரனைப்
பாதகனின் கையிருந்து
பாதுகாப் பாய் என்று

நம்பித்தான் ஐயா
நடக்கின்றேன் நான் தனியே.
இம்பரிலே எம் மினத்தை
எசித்திருந்த வல்லரக்கன்

பாரவோன் கையிருந்து
பாதுகாத் திட்டவனே!
பாரமாய்த் தானிருக்கும்
என்னுடைய பாலகனைச்
சேரிடத்திற் சேர்த்திடய்யா!
செகத்தின் இரட்சகரின்

முன்னோடி யாக இங்கே
முன் நடந்து செல்ல வந்த
என் மகனை, நான் நடத்த
எனக்குதவி செய்திடய்யா.

தள்ளாத வயதில், இந்தப்
பிள்ளையினைத் தான் சுமந்து
முள்ளாறும், கல்லாறும்
மூச்சிழுக்க நான் நடந்தேன்.

கோதாட்டி இந்தக்
குழந்தையினைத் தான் வளர்க்க
மூதாட்டி என்றனுக்கு
முயல்வினை நீ தந்திடய்யா''

என்று பல சொல்லி அந்த
எலிசபெத்தம் மாள் நடந்து
நன்று தரும் பாலைவனம்
நண்ணினள் காண் அம்மானை.

# பாலைவனந்தனிலே பாலசஞ்சுவாம்

## அ. எலிசபெத்தம்மாள் பிரிவும் பரிவும்.

பால சஞ்சு வாம் வளர்ந்து
பறந்து திரிகின்றான்.
நாலுவயது ஆண்குழந்தை
நடந்து திரிந்திடுமோ?

கோல மயில் தோகை விரித்து
ஆட அவன் கூத்தாடி
நீலக் குயில் இசையில்
நெஞ்சம் பறிகொடுப் பான்.

சின்னக் குருவி
சிறகை அடித்திடுங்கால்
அன்னையுடன் சேர்ந்தந்த
அழகை ரசித்திடுவான்

மான்குட்டி யைப்பிடித்து
மடியில் கிடத்துகிறான்.
தேன் கொட்டும் என்று சொல்லி
தெரிந்துள்ள பிள்ளையுவாம்

கூட்டுக்கு எறியாளும்.
கொடுமையது செய்யாது
பாட்டிலுமே தாய் இறைவன்
பத்தியைத்தான் ஊட்டினளாம்.

அத்திப் பழம் பறித்தே
ஆசையுடன் தின்னுகிருன்
தித்திப்புக் கூட என்ருே
அன்னைக்கும் ஊட்டுகின்ருன்?

வெள்ளை முயற் குட்டி ஒன்றைப்
பிள்ளை பிடித்துவிட்டான்.
கொள்ளை அழகு என்று சொல்லிக்
கொஞ்சுகின்ற வேளையிலே

வாய் இல்லாச் சீவன் இதை
வதைத்திடவேண் டாம் என்ற
தாய் சொல்லைத் தட்டாத
தண்ணளி உள்ளான் பிள்ளை

ஊருகின்ற பாம்புக்கும்
ஊறு செய்யான்; ஆம் அவன்றன்
பேரும் அருள் அப்பன் அன்ருே!
பிரியமுடன் தன்னுடைய

தாயை வணங்கிடுவான்.
தாய் சொன்ன வாறு இறையை
நேயமுடனே எந்த
நேரமுந்தான் கும்பிடுவான்.

இப்படியாய் யோவானுக்கு
இயல்பான தண்ணளியும்
செப்பு செபதபமும்
சேர்ந்து வளர்ந்திடுங் கால்.

காலம் கனிகிறதைக்
கண்டு எலிச பெத்தம்மாள்
பாலனைக் கையால் அணைத்து
பாச முகம் சிவக்கச்

சிலனே என்னுடைய
செல்வக் களஞ்சியமே!
பாலைப் பழமே! என்
பாசமுள்ள ராசாவே!

அத்திப் பழமே! என்
அன்பான புத்திரனே
சத்தியரா சன், வரவை
சாற்றவந்த கட்டியனே!
முத்தே! முழுநிலவே
முக்கனியே! சர்க்கரையே!

அத்தன் எனை மேலே
அழைக்கின்றான்: அத்தேவ
சித்தப் படி உன்னை
நான் பிரியப் போகின்றேன்.

மாலை இருள் போலே
மரணம் வருகிறதே
பாலைவனச் சோலையிலே
பாலன் உனைக் கைவிட்டு

சோலைக் கிளியே, நான்
சொர்க்கமுறப் போகின்றேன்.
கூட்டை விட்டு என் ஆவி
குடி எழும்பப் போகிறது!

காட்டிலே என்னுடைய
கண்மணியை விட்டு விட்டு
போகத்தான் போகின்றேன்!
புலம்பிப் பயன் என்ன?
சாகத்தான் போகின்றேன்
நீ அழுதும் ஆவதென்ன?

பாவி படுபாவி
பச்சைக் குழந்தைகளைச்
சீவி எறிகையிலே
சீராளா நான் உன்னைக்

கடவுள் துணையுடனே
காத்திங்கே வைத்திருந்தேன்.
காத்து வந்த ரத்தினத்தைக்
காட்டில் விட்டுப் போகின்றேன்!

சிப்பி தந்த முத்தினை நான்
சிந்திவிட்டுப் போகின்றேன்!
பாலனே! என்னுடைய
பாசம் உள்ள ராசாவே.

நாலு வயதில் உனை
நான் பிரிந்து போனாலும்
பாலைவனம் சோலைவனம்
ஆகி உன்னைக் காக்குமடா!

காயும் கிழங்குகளும்
கனியும் உனக்குண்டே!
பாயும் படுக்கையுமாய்ப்
பசும்புல் தரை இருக்கே!

மானும் மரையும் இங்கே
    நீ மகிழத் துள்ளுமடா!
தேனும் புனலும் இங்கே
    தெவிட்டத்தான் உள்ளதடா!

ஊருகிற பாம்பும் உனக்கு
    ஊறு செய்ய மாட்டாது.
பாருலகில் தேவனது
    பக்தி உனைக் காக்குமடா.

ஏரோதன் வாளிருந்தே
    இரட்சித்த தேவசித்தம்
ஆருமற்ற பாலையிலும்
    ஐய உனைக் காக்குமடா!

அத்தன் உன்னைப் பாலையிலும்
    அன்னை என்னக் காத்திடுவார்.
பக்தியுடன் ஆண்டவரில்
    பாதம் பணிந்திடுவாய்.

வானன் கருணையது
    காக்கும் உனை வா. வா...! ஆ!...
நானும் விடை பெறுவேன்.
    நாக்கும் த ... ட ... க் ... கி ... றதே!

## ஆ. அன்னையைப் பிரிந்த சின்ன அருளப்பரின் சிந்தாகுலம்

அம்மா ...!
அம்மா ...!
அம்மா ...!
அசைவில்லை! ஆட்டமில்லை!

அம்மா! நான் தான் அம்மா!
அந்தோ ஏன் பேசவில்லை?

பாலன் முகத்தினையும்
பரிவோடு பார்க்கவில்லை!
சீலா! என அழைத்துச்
செல்லம் பொழியவில்லை,

ஏலாதா தாயே?
எனைப் பார்க்க ஏலாதா?
பாலைப் பழமே!
என்றழைக்க ஏலாதா?

கோல மலர்முகம் ஏன்
கூம்பியது? சொல்லம்மா.

இம்மா நிலத்தில்
எனக்கு என்று இருந்ததெல்லாம்
அம்மா! நீதான் அம்மா!
அய்யோ நீ சென்றுவிட்டாய்.

என்னைத் தனியாக
இங்கு விட்டுச் சென்றுவிட்டாய்
அன்னைத் தமிழே!
அழகா? முறைதானா?

'அன்பான புத்திரனே!
அருளப்பா! உன்னை இந்த
வன்பாலை யில் விட்டு
வழி நடக்கப் போகின்றேன்'.

என்று நீ சொன்ன தெல்லாம்
இதற்காய்த்தா னு, அம்மா?
இன்று நீ சென்றுவிட்டாய்
என்னை மட்டும் விட்டு விட்டு.

கன்றைத் தவிக்கவிட்டுக்
காராம் பசுவே! நீ
சென்ருயே என்னுடைய
சிரசே சுழலுதம்மா!

பாம்பு கடிக்கும் எனப்
பக்கத்தில் வந்து நிற்பாய்!
பாம்பு கடிக்க வந்தால்
யார் இன்று அடித்திடுவார்?

தேனும் தினைமாவும்
தேடி எனக்கு ஊட்டிடுவாய்!
வானின் வழி போனுல்
வந்து எனக்கு ஆர் தந்திடுவார்?

காய் இருக்க நீ. எனக்குக்
கனிபறித்தே ஊட்டினையே!
போய் இருக்கும் அவ்விடத்தைப்
புலப்படுத்த மாட்டாயா?

மாலை இருள் வந்திடுங்கால்
மாதா நீ இல்லாமல்
பாலை இதில் நான் தனியே
படுத்து, உறங்கக் கூடுவதோ?

பச்சைப் புல் ஏன் கண்ணில்
பற்றி எரிகிறது?
அச்சம் இன்று ஏன் என்நெஞ்சை
ஆட்டி அலைக்கிறது?

பிள்ளை எனைப் பாராமல்
என்தாய் பிணமாக!
அள்ளி அணைத்தெடுக்கும்
கையில் அசைவில்லை!

வெள்ளை முயற் குட்டி! என்றன்
வேதனையைத் தீர்ப்பாயா?
வண்ணத்துப் பூச்சி! என்றன்
வருத்தம் அறிவாயா?

மான் குட்டி யே! என்
மனவருத்தம் தீர்ப்பாயா?
ஏன் கட்டை மாதிரியாய்
என்தாய் கிடக்கின்றாள்?
தாயே! உன் பூத உடல்
தன்னை நான் என்னசெய்ய...?

..........................................................

..........................................................

தூயோர் அதோ! அதனைச்
சுமந்து அடக்கம் செய்திடவோ

வானிருந்து வந்தார்கள்?
வணக்க முடன்எடுத்து
நானிருந்த பூ உடலை
நல்லடக்கம் செய்கின்றார்!
தேவனே! என்னை, இங்கே
ஈன்ற திருவுடல்தான்
பூமிக்குள் இன்று
புதைக்கப் படுகிறதே!
ஆவதெல்லாம் உன்னுடைய
ஆட்சி! அரசாட்சி!
தேவாதி தேவா! உன்
திருவிளையாட் டே, எல்லாம்!

அன்னை அநுதினமும்
அளித்திட்ட பாடம் அதைச்
சின்னவன் இன்றே, கண்டேன்.
சிந்தா குலம் அதனை
உன்னிடத்தில் ஒப்படைத்தால்
உள்ளம் வெளியாகும்!

மான் குட்டி! நீ போ!
மனக்கவலை இல்லைப் போ!
ஏன் கிட்ட நிற்கின்றாய்
வெள்ளை முயற்குட்டி?

வண்ணத்துப் பூச்சி!
வருத்தம் எனக்கு இல்லைப்போ!
கிண்ணத்தில் தேனை
எனக்கென்று வைத்திருக்கும்

பூவே! நீ வாடாதே;
    போயிற்றே என் துன்பம்.
ஆவே! கதறாதே;
    அழவில்லை நான் இங்கே.

குயிலே! நீ கூவிடுவாய்;
    குழப்பம் எனக்கில்லை.
மயிலே! நீ ஆடம்மா;
    மனக்கவலை மாற்றுகிற
மார்க்கம், என் அன்னை
    எனக்கு ஓதும் சன்மார்க்கம்
தீர்க்குமே என்றன்
    கவலையினை நிச்சயமாய்.

பார்க்கும்இடம் எல்லாம்
    பரனார் திருவருளே!
ஆர்க்கும் முரசாய்
    அடித்து இடித்துப் பெய்கின்ற
மாரி மழையும்
    மகிபன் திருவருளே!
வாரித் திரையின்
    முழக்கும்அவன் வல்லபமே!

வானத்து மீனங்கள்
    வாழும் அகல் விளக்கே!
தேனைத்தான் பூவிற்றான்
    தேடித்தான் வைத்துத்தான்
வானத்து இறையவனே தான்
    வையத்தை ஆளுகின்றான்!

புல்லிலும் கூட, அவன்
புலமை தெரிகிறது!
கல்லிலும் கூட, அவன்
கருணை வழிகிறது!

எல்லாம் அவன் செயலே!
எல்லாம் அவன் அருளே!
வல்ல இறைவா! என்
வாழ்த்து, இனிய என்வாழ்த்து.

## பகிரங்க சீவியத்துக்குப் பக்குவ நிலையடைந்த சஞ்சுவாம் பாலைவனத்தை நீங்குகிறார்

'செரீத்தே! சுகமே! என்
சுந்தரமே' என்று சொல்லிக்
கைத்தலத்தில் ஏந்திக்
கனகமுலை தந்நாளை
இற்றைக்கு இருபத்தாறு
ஆண்டுகளின் முன் இழந்தேன்.
அற்றைக்கும் என்னை இங்கே
ஆண்டவரே காத்திட்டார்!

நாலு வயதில் எனைத்
தாய் தவிக்க விட்டாலும்
பாலுடனே ஊட்டிவிட்ட
பத்தி அது தான் இந்தப்

பாலையிலும் எந்தனுக்கோர்
பாதுகாப்பு ஆகியது!

காலையிலும் மாலையிலும்
கர்த்தர் எனைக் காத்திட்டார்.
பாலையிலும் எந்தனுக்கோர்
பசுஞ்சோலை ஆக்கிவிட்டார்!
வாலிபனாய் இன்று
வளர்ந்து விட்டேன். ஆண்டவர் சொல்
சீலத்தைச் சீனாய்
மலையிலே கற்பித்த
கட்டளைகள் பத்தைக்
கயமை யுடன் எவர்தான்
தட்டினா லும் அவரைத்
தட்டித்தான் கேட்டிடுவேன்:
திட்டுக்களைத் தட்டிப்
பள்ளத்தைப் போய் நிரப்பி
ஒப்புரவு செய்திடு வேன்.
உலக இரட்சகரின்
பாதையி லே உள்ள
பழுதெல்லாம் போக்கிடுவேன்.
நீதி நிமித்தம் இங்கே
உபத்திரவப் பட்டாலும்
சாதிக்க வேண்டியது
சத்தியமே! முத்தி எனும்
ஆண்டவரின் பேரரசும்
அண்மித்து விட்டதினால்
மாண்டதவந் தான்இங்கே
வேண்டிக் கிடக்கிறது.

ஈண்டு இந்தப் பாலையிலே
ஈர் பதினைந்து ஆண்டுகளாய்
நீண்ட தபசு
நிகழ்த்தி ... எனதுடையாய்
ஒட்டகரோ மத்தை
உடுத்தி ... வார்க் கச்சுஇடையில்
கட்டி, இங்கே காணுகிற
காய்கனியை வேர் கிழங்கைத்
தொட்டுத் தே, னோடுஅயின்றேன்;
தொடவில்லைத் திராட்சை மது!

மாநிலத்து மீட்பனுக்குச்
சாட்சி சொல்ல வேண்டியதால்,
மானிடர்க்கு நல்ல மனச்
சாட்சி வர வேண்டியதால்,
நான், இனிமேல் மோனமுனி
ஆக மட்டும் வாழாதே
அண்மையிலே உள்ள மனு
ஊர்களுக்குஞ் சென்று, அங்கே
உண்மையினைப் போதிப்பேன்.
ஊனமதை ஞானமதாம்
தண்ணீரா லே, கழுவத்
தான் தருவேன் இஸ்நானம்!''

என்று சொல்லிச் சஞ்சுவாமும்
ஏற்று வெளியே வந்து
நன்றுதரும் யோர்தானை
நண்ணினர்காண் அம்மானை.

# யோர்தான் நதிக்கரையிலே சஞ்சுவாம் நம்பியோர்க்கு ஞானமுழுக்கு அளித்ததோடு தன்னைப்பற்றிய தடைகளுக்கும் விடையளிக்கிறார்.

பரீரோர் சுமந்திட்ட
பாவம் மிகைப்பட்டு...
ஓர் கன்னி யைத்தொட்டு
உலகுக்கு வந்திட்ட
சீர் தன்னைத் தொட்டிட்ட
சேசுவினைத் தான் சுட்ட
யோர்தான் நதி தட்ட
வந்திட்ட யோவானர்,
பெத்தானி யாவில்
பெருகும் நதிக்கரையில்
சுத்த மனத் தோடு தம்மைச்
சூழ்ந்தவர்க்குச் சொல்லுகிறார்.

''தேவன் அரசாட்சி
தெரியும் அருகாக.
பாவ அழுக்குடையீர்!
பச்சாத்தா பப் படுவீர்,
ஆவியினால், அக்கினியால்
அருள்முழுக்குத் தான் அளிக்கும்

தேவ குமரன் அவர்
திருவிறக்கம் செய்துவிட்டார்.
ஆவதொரு நற்பொழுதில்
அவர் வந்து சேருமட்டும்

தண்ணீரா லே, ஞானஸ்
நானத்தை நான் தருவேன்.
கண்ணீரா லே, பாவம்
தன்னைக் கழுவிடுவீர்!
நோன்பிருங்கள்! அத்தவமே
நும்மைஎலாம் வாழவைக்கும்!
ஆம் பொழுதும் வந்துளதாம்
அன்பர்களே!'' என்னுகையில்,

''சேரவந்தார் அங்குபரி
சேயர், சதுசேயர்
போதகரே'' என்று எழுந்த
பொதுவர் மொழி கேட்டு,

''நச்சு விரியன் அதன்
(நாகத்தின்) குட்டிகளே!
பச்சாத்தா பம், உமக்கும்
பாவிகளே! தேவை. உங்கள்
தப்புக்கு உரிய அந்தத்
தண்டனையி லே, யிருந்து
தப்பும் வழிசொல்லித்
தந்தது யார் பாவிகளே?
ஆபிரகாம் மக்கள் எனும்
அகந்தையுடன் நிற்பவரே!

தேவன் இந்தக் கற்களிலும்
திப்பியமாய் மக்கள்தமை
மேவி எழுப் பக்கூடும்
மேலான வல்லபர்தாம்.
யாவும்அவர் ஆடல் என
யான் உறுத்திக் கூறுகிறேன்.

வேர் அருகே கோடரிகள்!
வேளை வருகிறது.
ஆரும் தவறிவிடல்
ஆகாது அத் தண்டனைக்கே!

எட்டிக் கனிகளைத்தான்
ஏந்துகிற வீண்மரங்கள்
வெட்டுண்டே அக்கினியில்
போடப்படும்! அந்தச்
சுளகை எடுத்தவனும்
சும்மா விடுவானே?
கழிக்கும் பதரை எல்லாம்
கனலிடைத்தான் போட்டெரிப்பான்''

என்று பல கூறி அங்கே
எச்சரித்து ''நீரும் போய்
நன்றே தவம் புரிந்து
நல்லோர் ஆவீர்'' என்று
சக்கரியா புத்திரனார்
சான்றோர் புகழ் யோவான்
மிக்க அருள் அப்பரவர்
மேவி இது கூறுகையில்,

ஆயத் தொழிலாளர்
அங்குவந்து கும்பிட்டுத்
''தூயவரே! நீர் எமக்குச்
சொல்லும் உரை என்ன?'' என்றார்.

''ஆயத்துத் தீர்வைதனை
அளவோடு அறவிடுங்கள்.
தீயதுபார் கையூட்டு
இலஞ்சம்'' என்றார் யோவான்.

போர்வீரர் அங்குவந்து
''போதகரே! எங்களுக்கும்
தாரீர் அறிவுரைகள்''
என்று தங்கள் கைகுவித்தார்.

''ஊதியத்தை வாங்கிடுவீர்
உண்மைக்கு மாறான
பாதகத்தைச் செய்தே
பணத்தைப் பறிக்காதீர்
வீரர்களே!'' என்று
விடைதந்தார் சஞ்சுவாமே.

செருசலேயில் வாழுகிற
யூதர்தம் ஏவலினால்
குருக்கள் இலேவித்தர்
கூடி அங்கே வந்து நின்று
''வருவார் எனப்பட்ட
மெசியாவோ தாங்கள் என்றே
அருள் முழுக்குத் தான் கொடுக்கும்
ஐயா நீர் சொல்லும்'' என்றார்.

''இல்லை'' என்று யோவானும்
இயம்புகின்ற வேளையிலே
''சொல்லும் எலியாசோ
தாங்கள் ஐயா சொல்லும்?'' என்றார்.

இதற்கும் அவர் ''இல்லை இல்லை''
என்று சொன்ன வேளையிலே
''எதற்குமே இல்லை என்பீர்.
எம்மை இங்கே விட்டவர்க்கு
என்ன பதில் சொல்வோம்? நீர்
இறைவாக் கினர்தானோ?''
என்றுரைக்கச் சஞ்சுவாமும்
''இல்லை'' என வேமொழிந்து

''வானளந்த யேசுபிரான்
வழியை அழகாக்கும் எனக்
கானளந்த ஓர்குரல்தான்
காதளக்கும் — என்று இசையாஸ்
தானளந்த ஏட்டினிலே
தம்துணிபை நாட்டினரே.
கான், அளந்த அக்குரலே
நான்; விளங்கிப் போம்'' என்றே
தேன் அளந்த தன்மொழியால்
தெரிவித்தார் சஞ்சுவாமே.

''அப்படி ஓர் ஆளாயின்,
அருளப்பா! இங்கு நின்றே
எப்படிநீர் எல்லோர்க்கும்
ஞானஸ்நா னம் கொடுப்பீர்?''

என்றவர்தான் கேட்கையிலே
எஹோ ஹானன்
யோண் சொல்வார்:
''நன்ருகக் கேட்டிடுவீர்
நான் கூறும் உத்தரத்தை.

வாக்களிக்கப் பட்டவனும்
நானில்லை. ஆயின், அவர்க்கு
ஆக்கும் வழியதனை
ஆயத்தம் செய்யவந்தேன்.

பூதலத்தை மீட்டெடுக்கும்
புனிதன் அணிந்திருக்கும்
பாதஅணி யைத் தொடவும்
பாத்தியதை அற்றவன் நான்.

எனக்குப்பின் வருகிறவர்
என்னிலும், மே லானவராம்.
எனக்கும் முன் னே இருந்தார்,
அவர் என்று அறிந்திடுவீர்.
மனுக்குலத்தை மீட்டிடும் இம்
மானுவேல் தா, னேஅவராம்''
என்று விடை சொல்ல, இலே
வித்தர், குருக்களுடன்
சென்றதனை எல்லோர்க்கும்
செப்பினர்காண் அம்மானை.

## சஞ்சுவாம் ஞாலத்து மீட்பனுக்கே ஞானஸ்நானம் கொடுத்து, மாட்சியுள்ள யேசுவுக்குச் சாட்சியமும் சொல்லுகிறார்.

திண்ணம் புனல் ஓடித்
தான் பெருகும் யோர்தானில்
எண்ணுக் கடங்காதோர்
இஸ்நா பக யுவானி
தண்ணீரால் ஆட்டுகிற
தப ஞானஸ் நானமதை
ஏற்று அங்குத் தங்கள்
இதயத்து இருளெலாம்
மாற்றிப் புதிய
மலர்ச்சியினைக் கண்டார்கள்.

பொங்கும் புனலால்
புலன் அழுக்கைத் தாம் கழுவ
அங்கு வந்த பக்தர்களில்
அன்று வந்த பக்தனைத்தான்
எவ்வண்ணம் இங்கே
எடுத்துரைப்பேன்? இப்புவிதான்
உய்வண்ணம் இங்கே
ஒருதாய் மகனுகி
மைவண்ணப் பாவத்தால்
மாளாது காத்திட்ட,

ஜயன் — அவன் யேசு
  நசரேனு தான் அங்கே
யைய வந்து சஞ்சுவாமைப்
  பார்த்து ''ஐய நானகனே!
தண்ணீரா லே ஞானஸ்
  நானத்தைத் தாரும்'' என்றார்.
கண்ணாலே மீட்பர் தமைக்
  கண்ட சஞ்சு வாம்முனியோ

விண்ணவரே! என்ன
  வியப்பு! புதுமை இது!
அண்ணலே! தாங்கள்
  அளிக்கும் முழுக்கைத்தான்
பேருகக் கொண்டாட
  வேண்டியவன் நான். இன்று
மாருக நீர்வந்தே
  என்இடத்தில் கேட்கிறது
சாலாதே! நான் அளிக்கும்
  சலத்தின் ஞா னஸ்நானம்
மேலான தங்களுக்கோ
  ஏலாது மேலவரே!''

என்றுரை செய் போதினிலே
  யேசுநச ரேனுவுந்தான்,
''அன்று எழுதி வைத்தவைகள்
  ஒன்றி நிறை வேறிடவே
இன்று எனக்கும் இக்கணமே
  இஸ்நானம் தாரும்'' என்றார்.

அண்ணல் அருண்மொழியை
அருளப்பர் தாம் கேட்டு
மண்ணுலக மீட்பரவர்
மனக் கருத்தைத் தாம் உணர்ந்து
தண்ணீரை அள்ளித்
தலைமேலே கை உயர்த்தி
விண்ணோர் மகிழ்சிறக்க
வியனிலத்தோர் கைகுவிக்க
அண்ணற்கு அருள் முழுக்கும்
ஆட்டினர்காண் அம்மானை.

அண்ணலுந்தான் ஞானமுழுக்கு
ஆடுகிற அப்பொழுதில்
கண்ணில் தெரியுது ஒரு
காட்சி அரு ளப்பருக்கு!
மாட்சி பெறும் காட்சி இது!
மாடப் புறு வடிவில்
சாட்சி எனவே, தூய
ஆவி இறங்கி வந்தார்.
மாடப்பு றூ, வடிவில்
மாநிலத்து மீட்பரின்மேல்
தேடி அருள் சொரியும்
தேவஆவி தாம் இறங்கக்
கண்டாரே சஞ்சுவாமும்!
காணுகிற அப்பொழுது
விண்டான் பிளந்தே
வியஎம் ஒன்று கேட்கிறதாம்.

"நேசமகன் தான் இவரே.
என்றன் சுதன் மீது
பாசம் மிக உடையோம்"
என்றொலிக்கும் வான் ஒலியே!

வண்ணப் பு றுவடிவை
வானொலியைச் சேரத்தான்
கண்ணுற்ற சஞ்சுவாமும்
காசினியோர் தாம் அறிய
"மாநிலத்து மீட்பர் இவர்.
மாடப் புருவடிவில்
தான் இவர்மேல் தூயவராம்
ஆவிவர நான் கண்டேன்!

விண்பிளந்தே ஆங் கொலித்த
விம்மிதமார் செய்தியையும்
மண்ணவரே! கேளுங்கள்!
மாதேவ னும் தந்தை
'அரிய மகன் இவரே!
என்றன் சுதன் மீது
பிரியம் மிக உடையோம்'
என்று ஒலிக்கச் செய்தார்காண்!
யேசுநச ரேனு என்னும்
இவர்தானே மீட்பர் என
ஆசங்கை இன்றி
அறிந்துகொள்க" என்றூராம்.

இருநாளின் பின்னும் அங்கே
யேசுவரக் கண்ட யுவாம்
வருவார் எனப்பட்ட
மீட்பர் இவர் தானே.

பூவுலகோர் பாவமதைப்
போய்ச்சுமந்து தீர்க்கின்ற
தேவ ஆட்டுக் குட்டி இவர்
தெரிந்திடுவீர் மாநிலத்தீர்!
எந்தனுக்கும் முன்னிருந்த
இறைமைந்த ஞம், இவர்தான்
வந்து நடக்கும் அந்த
வழியை வகுத்திடவே
வந்தேன் பிறப்பெடுத்து, இவ்
வையத்தின் கண்'' என்றே
மாட்சியுள்ள யேசுவுக்குச்
சாட்சி சொன்னுர் அம்மானே.

## ஏரோது மன்னன், தன் தம்பி பிலிப்புடைய தாரமாம் ஏரோடியைக் கூடிய தவறு தன்னைக் கண்டிக்கிறர் அருளப்பர். ஏரோது அரசன் அவரைச் சிறையில் அடைக்கிறன்.

அப்பிறு லே, ஞானஸ்
நானம் அளிக்கும், அருள்
அப்பரவர் இப்படியாய்
ஆண்டவர்க்குச் சாட்சி சொல்லி

எப்பா லவருக்கும்
இஸ்நானம் தான் அளித்தே
'ஒப்பில் அருள் அப்பர்' என
உலகோர் தொழ இருந்தார்.

இப்படிஆம் வேளையிலே
ஏரோதன் என்கிறவன்,
செப்பு கலி லேயாவைச்
சீசருக்காய் ஆள்கிறவன்,
தம்பி பிலுப்புடைய
தாரத்தைத் தான்கூடி
வம்பு புரிந் திட்டானே!
வழக்கு இதனைக் கேள்வியுற்றே
சத்திய வாதி அவர்
சஞ்சுவாம் அங்கு சென்று
எத்திக்கும் மண்டியிடும்
இறைவன் என்றும் பாராது
பித்தம் தெளிந்திடவே
பிரசங்கம் செய்தாரே.

சுத்தியலோ சொற்கள்? அவன்,
நெஞ்சைப் பிளக்கும் அவை
கத்தியல்லோ? யோவான், அக்
கலிலேய ஆள்பதியை
மத்தாய்க் குடைந்திட்டார்!
மன்னவனே! ஏரோதே!
மாறுத யாப்பாக
மாதேவன் தான் வகுத்த
ஆறுவ தான அந்தக்
கட்டளையைத் தட்டிவிட்டாய்.

மன்னன் என்பதை, மறந்து
'மசுவாது' செய்து விட்டாய்.
உன்னுல் உலகில்
ஒழுக்கம் இழுக்கும் ஐயா.

மக்கள் தவறிழைத்தால்
மன்னனவன் தான் ஒறுப்பான்;
மன்னன் தவறிழைத்தால்
மாதேவன் தான் ஒறுப்பார்.

குடிகள் தவறு செய்தால்
கொற்றவன்தான் தண்டிப்பான்;
முடியுடையான் திங்கிழைத்தால்
முதல்வன் அவன் தான் ஒறுப்பார்.

படியிலுள்ள மக்கள் உந்தம்
பாவத்தைக் கண்டவுடன்
வடிவாகத் தாமும் அல்லோ
வந்து தவறிழைப்பார்!
பிடிவாதம் வேண்டாம் காண்.
பிழையைத் திருத்திடுக.
படு மோசம்! சீ! பிலிப்பின்
பத்தினியை விட்டிடுக."
என்றந்த யோவானுர்
ஏரோதுக்கு ஓதுகையில்
நின்றந்த நீலியவள்
(நிசத்தில் பிலிப்பினுக்கே
பாரி அவள்) யோவானைப்
பழிவாங்கும் திட்டத்தை

நேரிதாய்ப் போடாமல்
　　நெஞ்சகத்தில் வஞ்சகமாய்
போட்டு விட்டாள்! அங்கந்தப்
　　புனிதர் சொன்ன புத்திமதி
வேட்டுத்தான்! என்றாலும்
　　வெறுக்கவில்லை ஏரோதன்;
கேட்டுத்தான் நின்றிட்டான்.
　　கீழ்மகளாம் ஏரோடி
போட்டுக் குழப்புகிறாள்!
　　பூவாய் மலருகிறாள்!
ஆட்டம் பயிலுகிற
　　அழகு விழி இரண்டை
வேட்டம் பயிலவிட்டால்
　　வேந்தனுந்தான் என்ன செய்வான்?

மானில் மருண்டவிழி
　　மீனில் புரண்ட விழி
தேனில் பிரண்ட மொழி
　　பாலில் திரண்ட மொழி
மால் செய்ய, ஏரோது
　　மன்னவன் தன் னை, மறந்தான்!

நூல் செய் நுசுப்பினிலே
　　நொய்ந்தாடும் மேகலையால்
காலில் கிடந்தாடும்
　　காற்சலங்கை போலாடிக்
கோலைக் கொடுங்கோலாய்க்
　　கோணிடவே செய்திட்டான்!

வாலைக் குமரி என
வந்தாடும் சுந்தரிதான்
பாலைப் பருக்கிவிடப்
பாவம் அதில் ஊறிவிட்டான்!
உண்மையினை யோவானுர்
ஓங்கி அறைகையிலே
மண்ணினைத்தான் நோக்குவது
போல நின்றுன் ஏரோதன்!

மாய மகள் ஓர் புறமாம்;
மாமுனிவன் ஓர் புறமாம்.
மத்தியிலே மன்னன்
மனங்குழம்பி நிற்கின்றுன்!

காமத்துப் பாலினைத்தான்
கறந்து பருக்கியவள்
ஏமத்தைச் சாட்டுகிறுள்!
''இவனுலே ஆபத்து!
போகவிட்டால் எங்கள்
புது உறவை நாடெங்கும்
வேகமாய்த் தான் பரப்பி
வில்லங்கம் செய்திடுவான்!
ஆட்சிக்கு எதிர்ப்புத்
தெரிவிக்கும் யூதர்களைச்
சூட்சியாய் ஏவி, இதைச்
சொல்லுவிப்பான் சீசருக்கும்!
வந்திடுமே தங்கள்
பதவிக்கும் ஆபத்தாம்!
அந்த வகையில் இந்த
அருளப்பனைச் சிறையில்

பூட்டி வைப்ப தே, நல்ல
புத்தி'' என்று கண்களையும்
ராட்டினமாய்ச் சுற்றவைத்தாள்!
மன்னவன்தான் என்ன செய்வான்?
மாட்டிவிட்டாள் சுந்தரியாள்
மன்னன் தடுமாற!

ஓட்டுவதும் ஏலாதே!
யோவானை வன் சிறையில்
பூட்டுவதும் மன்னனுக்குப்
புத்தி என்று தோன்றவில்லை.
வாட்டுவதா யூதர்
மதிக்கும் பெரியவனை!

மாய மகள் ஓர்புறமாம்!
மாமுனிவர் ஓர் புறமாம்!
மத்தியிலே ஏரோதன்
மனங் குழம்பி நிற்கின்றான்.

கோல் கொண்ட வேந்தன்
குலைந்தானே! தன் இடையில்
நூல் கொண்ட ஏரோடி
நூறு முறை இரந்தாள்.
பஞ்சு அஞ்சும் மெத்தென்ற
பாதங்கள் நோக வந்து
கொஞ்சுகிறாள் ஏரோடி!
குள்ள முனி யை உடனே
வெஞ்சிறையிற் போடும் என
வேல்விழியாள் மாலுறுத்த

'சஞ்சுவாம் சொல் உண்மை
— சரதம்' எனக் கொண்டாலும்
விஞ்சிய பெண் ஆசையினுல்
வீழ்ந்துவிட்டான் ஏரோதன்.
'பெண் வழிச் சேறல்' எனும்
பெருந்தவறில் ஊறியவன்
கண்ணைக் குருடாக்கிக்
காமுகியின் சொற்படியே
அண்ணல் யுவாம் முனியை
அடைத்தானே வெஞ்சிறையில்!

## சிறைப்பட்டிருந்த சஞ்சுவாம் யேசுவிடம் தம் சீடர்களை அனுப்புகிருர். இவ்வண்ணம் 'யேசுவே மாநில மீட்பர்' என்பதைப் பிரசித்தமாக உறுதிப்படுத்துகிருர்.

விண்ணரசும் அண்மி வரும்
வியளத்தைச் சொல்லவந்து
மண்ணரசன் ஏரோதை
மண்டியிடத் தான்மறுத்தே
அஞ்சாது அறம் உரைத்த
அருளப்ப ரை, அரசன்
வெஞ்சிறையிற் போட்டாலும்
வீரத் துறவிஅவர்

ஆண்டு ஒன்ருய் அந்த
அருஞ்சிறையில் கட்டுண்டு
நீண்டதுயர் கொண்டாலும்
நீதி என்று கண்டதனைக்
கீண்டு எடுத்துக் காட்டுகிற
கிளர்ச்சி தணியவில்லை.
பிரியமுள்ள சீடர்களும்
அவரைப் பிரியவில்லை.

அரியோன் பெரியன் என
அன்று மக்கள் நம்பிவந்த
நம்பி யேசு நாதர் செய்த
நவங்கள் — புதுமைகளை
வெம்புசிறைப் பட்டிருந்த
வீரமுனி கேள்வியுற்றே...
தெள்ளத் தெளிவாகச்
சேசுநசேர் தான் 'அந்தப்
பிள்ளை இறைவன்';
பிதாவாலே வாக்களிக்கப்
பட்டபடி இந்தப்
படியோர் செய் பாவமதைச்
சுட்டெரிக்க வந்த
சுடர்த்தீ; சிறு மாட்டுக்
கொட்டிலிலே மாமிசத்தைக்
கொண்டுற்ற 'அவ்வார்த்தை';
மூடிக் கிடந்திட்ட
மோட்சத்தை மீட்டும் தன்
பாடுகளால் தட்டித்
திறக்கப் பிறப்பெடுத்த

இம்மனுவேல் — என்பதனை
இம்மா நிலம் அறிந்து
சம்மதிக்கு மாறு ... இந்த
உண்மையினைச் சாற்றுதற்குத்
தம்முடைய மாணவரில்
தகுந்த இருவரினை
"வம்மின்" எனவே, அழைத்து
"வருவார் எனப்பட்ட
மீட்பரவர் நீர்தானோ?
மெசியா வருவதற்கு
நாட்படுமோ சொல்லும் என்று
யேசு நசேர் சந்நிதியில்
தாட்பணிந்து கேட்டு வந்தே
தாரும் விடை" என்றே,
ஆட்கள் இருவரையும்
அவரிடத்தே செல்லவிட்டார்.

சீடர் உட, னே சென்று
சேசுநாதர் உள்ள இடம்
தேடிப் பணிந்து, அவரைத்
தெண்டனிட்டுத் தம் குரவர்
இட்ட பணிப் பை, அவர்க்கு
இசைவாகக் கூறினர்காண்.

கெட்ட மனுக்குலத்தின்
கேடகற்ற வந்தபிரான்
"பாரும் குருடர் எல்லாம்
பார்வை பெற்றுச் செல்லுகிறார்.
சேரும் செவிடர்களும்
செப்புவதைக் கேட்கின்றார்.

கூறும் முடவர்களும்
குட்டரோகம் கொண்டவரும்
வானின் மகிமையினுல்
வருத்தமெல்லாம் தீர்ந்தவராய்
வல்ல இறை வனைத்தான்
வாழ்த்திக் கொண்டு ஏகுகிருர்.
அன்றி, இறந்தவரும்
ஆவியுடன் தாம் எழுந்தே
நன்றி நிறைந்தவராய்
நானிலத்தில் வாழுகிருர்.
எல்லாம் நவம் – புதுமை!
இறைவனருள் அற்புதங்கள்!
நல்லன எல் லாம், இங்கே
நடந்தேறும் என்கரத்தால்.
எல்லாப் புதுமையையும்
இங்குநின்று பார்த்தீரே!
சொல்லுங்கள் உங்களது
சற்குருபால்'' என்று சொல்லி,
''மாருக என்னை
நினைத்து மரு ளாதவனே
பேறுடையான்'' என்ற உண்மை
பின்னும் எடுத்து ஓதி
''பெண் வயிற்றில் தங்கி இங்கே
பிறந்து வந்த பிள்ளைகளில்
அண்ணல் யுவானியைப் போல்
ஆரும் இல்லை மேதினியில்''
என்றே புகழ்கூறி
யேசுநாதர் அங்கு நிற்க.
நன்றே யுவாம் சீடர்
தம்குருவை நாடினர்காண்.

# ஆவணித்திங்கள்
# இருபத்தொன்பதாம் திகதி!
# அன்று நடந்திட்ட அவலம்!

ஆவணித் திங்கள், இரு
பத்தொன்ப தாம் திகதி
சேவற் குலம் எழுந்து
சிறகாலே மார் அடித்துக்
கூவினவே வா என்று 'அக்
கொலை' காணச் சூரியனை!

ஏரோதின் போர்வீரர்
எடுத்த கொலை வாள் போலச்
சூரியனும் வந்து
சுடர்ந்தானே கீழ்த்திசையில்!

சுத்தர் மனங்கள் எலாம்
சோகம் இசைக்கிறதேன்?
'தத்தெய்' எனச் சலமை
கால்தான் வலிக்கிறதேன்?

நீறுமேல் பூத்த
நெருப்பாகத் தான் இருக்கும்?
காறும் அழுக் காறு, உடைய
காதகியாம் ஏரோடி
நாகத்தின் பல்லுந்தான்
நன்றாய் வலிக்கிறதாம்!

தாகத்தைப் போக்கிடத்தான்
தவறாய்த் தெரிந்துகொண்ட
பாகத்தால் — ஏரோடி
மோகத்தால் — வேகத்தால்
போகத்தின் எல்லையிலே
போய் நின்ற ஏரோதன்
சோகத்தின் எல்லையிலே
சூதாய் அகப்பட்ட
சேதி அதனை, இனிச்
செப்புவன்காண் அம்மானை.

யோவானைக் கொல்லத்தான்
ஏரோதை வெல்லத்தான்
பாவை சலமையுந்தன்
பதத்தில் சலங்கைகட்டி
ஒத்திகை பார்க் கின்றாளாம்!
'ஊர்வசிதான் நான்' என்று
தத் தெய் தா தீம் என்று
தளிர்க்கால் எடுத்தாடி
பித்தனவன் ஏரோதைப்
பிணித்து விடப் போகின்றாள்!

வஞ்சமகள் ஏரோடி
வடிவாய்ப் படம் போட்டுக்
கொஞ்சத்தை வென்று விட்டாள்.
குறைபிடிக்க வந்தவரை
வெஞ்சிறையில் போடுவித்தாள்.
விட்டாளா அத்துடனே?
வஞ்சத்தைத் தீர்த்திடத்தான்
வருங்காலம் பார்த்திருந்தாள்.

''ஆகத்தில் என்னைத்தான்
அணைத்துவிட்ட ஏரோதுக்கு
ஒகத்து மாதம் இரு
பத்தொன்ப தாந்திகதி
அன்றோ பிறந்ததினம்!
நன்று! மிக நன்று!!
அன்று என்றன் ஏரோதை
அரசர், பிரபுக்கள்
நின்ற சபைதனிலே
நிச்சயம் நான் ஆட்டுவிப்பேன்''
என்று சபதம் இட்டே
ஏரோடி காத்திருந்தாள்!
'அரசனை நான் ஆட்டுவிப்பேன்;
அதனாலே யோவானின்
சிரசினை நான் வெட்டுவிப்பேன்'
என்று அவள்தான் காத்திருந்தாள்!
'போதிக்க வந்திட்ட
புலையன் தலையதனைப்
பாதிக்குப் பாதி எனப்
பகிர்ந்தளிக்கப் போகின்றேன்
காக்கை நரிகளுக்கு!
''கரி! சாம்பர்! மண் இந்த
யாக்கை – இத்தேகம்! உந்த
யௌவனம்! ஆம் மன்னவரே!
தூக்கி எறிந்திடுங்கள்
இவள் உறவை'' என்று என்னைத்
தாக்கும் திமிர்பிடித்த
தாடிமுனி, வன்தலையை

தூக்கி நிலத்தில்
அடித்து, அவன் பொய் நாவினிலும்
ஆணி அடித்து ... என்னுடைய
அழல் தன்னைத் தீரேனேல் ......

பேணும் இவள் பெண் இல்லை.
என் முகத்தில் கண் இல்லை.
மேனி எழில் இல்லை.
மென் காந்தள் கை இல்லை.
மின்னல் இடையில்லை.
மினுக்கு நடையில்லை.
கன்னல் தான் சொல் இல்லை.
கார்தான் குழல் இல்லை.
இன்னல்தான், ஏரோதர்
இனிமை எனக்கு இல்லை!'
என்று பல சொல்லி அந்த
ஏரோடி காத்திருந்தாள்!
பார்த்திருந்த அத்தினமும்
பக்கத்தில் வந்திடமவ
கூத்தொன்றை ஆடுவித்துக்
குழப்புத்தைத் தோற்றுவித்துச்
சாத்தான் அவ் ஏரோடி
சஞ்சுவா மைக் கொல்ல.........
பூத்திருந்த தன் செல்வப்
புத்திரியை நாடுகிருள்!

கண்ணும் கருவிலைதான்!
காமர் முகம் தாமரைதான்
எண்ணும் பொழுதந்த
இடையும் ஒரு கொடிதான்!

திங்கள் அவள் முகந்தான்!
தென்றல் அவள் நடைதான்!
சங்கு மணிக்கழுத்தில்
சத்தியமாய்ச் சூத்துத்தான்!
கொவ்வை அவள் இதழ்தான்!
கோங்கு அரும்பு மார்புகள்தாம்!
மௌவல் அவள் பல் நிரைதான்!
மனத்தில் அவள் மோகனந்தான்.
ஆட்டத்தில் தோகை என ...
அழகான அன்னம் என ...
பாட்டுப் பரதம்
பயின்ற சலமையைத்தான்
'வேட்டம் பயில்' என்று
வேண்டுகிருள் ஏரோடி.
''போதிக்க இங்குவந்த
புரட்சி முனிதலையைச்
சேதிக்க வந்துதித்த
செல்வமே! என் செல்வி!
சாதிக்க வேண்டியதுன்
சதங்கை ஒலி தானே''
என்று அந்த ஏரோடி
இயம்புகின்ற வேளையிலே
ஒன்றும் அறியாத
பேதைமக ளாம்சலமை
'என்னம்மா ..?' என்கின்ருள்!
ஏரோதிக் காதகியும்
''அன்னமே! என்னுடைய
ஆவிக் குடியிருப்பே!
உன்னிடத்தில் தான் என்றன்
உயிரே இருக்கிறது.

மன் அவையில் நீ நடனம்
    ஆடிடின், மன் னன், மகிழ்ந்தே
'என்ன பரிசு உந்தனுக்கும்
    ஏற்றது' என்று கேட்டிடுவான்!
அந்நேரம் நீ அந்த
    அருளப்பன் வன் தலையை
கேட்பாய்! அவன் தருவான்''
    என்று அந்த மாயமகள்
திட்டி வைத்த திட்டமதைத்
    தீர்க்கமுடன் கூறுகிறுள்.

'மாட்டேன்' என் பாளா?
    மறுப்பாளா? புத்திரிதான்.
கூட்டாக யோவானைக்
    கொல்லத்தான் ஒப்புகிறுள்.

துரைமார் பிரபுக்கள்
    தோழர் என ஏரோதன்
வரவழைத்த எல்லோரும்
    வந்திருக்கும் மண்டபத்தில்
கலிலேய ஆள்பதியின்
    பிறந்ததினக் கொண்டாட்டம்!
புலியே பெண் வேடம் அதைப்
    போட்டுவந்து நிற்கிறதோ?
பாயும் முன்னே அப்புலிதான்
    பதுங்கி இருக்கிறதோ?
தாயும் மகளும்
    தனியிடத்தில் தான்கூடி
ஆட்டத்தை — வேட்டத்தை
    அழகாகத் திட்டமிட்டார்!

கோட்டத்தில் எல்லோரும்
கும்மாளம் இட்டபடி!
பாட்டாம்! இசைகூத்தாம்;
பானமாம்! போனகமாம்!
காட்டாத செல்வமெலாம்
காட்டிக் கலிலேய
ஆள்பதியார் ஏரோது
அளித்திட்ட அவ்விருந்தில்
வாள் விழியை வீசி அந்த
ஊர்வசிதான் வந்தாளா?

'பாழும் அந்தக் காமத்தின்
பண்பு, இதுதான்' என்றுசொல்ல
ஆள்பதிபால் சாத்தானை
ஆண்டவர்தான் விட்டாரா?

கன்னல் பிழிந்தெடுத்துக்
கனிபிழிந்து பால் பிழிந்தே'
இன்னும் அதைத் தேனுலே
இனிப் பாக்கி விட்டதுபோல்
சின்னச் சலமை
சிறகை விரித்து ஆடாளாம்!

கன்னத்தி லே, ஆப்பிள்
காய்த்திருக்கும் அப்பெண்மான்
மின்னல் எனப் பாய்ந்து, அந்த
மேடை வர வேண்டும் என்றே
ஆள்பதியார் ஏரோதர்
ஆரோ கணஸ்வரத்தில்

''வாள் விழியே! ஆடெடியோ!
வந்திங்கே ஆடெடியோ!
கூவாத கோகிலமா?
கொஞ்சாத அஞ்சுகமா?
வாவாத மானோ நீ?
வந்திங்கே ஆடெடியோ!

வெறிக்காப் புதுவயினோ?
வெடிக்காத வெள்ளரியா?
மறிக்காள் உன்தாய்; வந்து
மன்னவன்முன் ஆடெடியோ!
பறிக்காப் புதுமலரே!
பழுக்கவைத்த மாம்பழமே!
கிறுக்கில் தலை சுழலக்
கிட்ட வந்தே ஆடெடியோ!
குழைக்காத சந்தனமே!
குறிக்காத குங்குமமே!
அழைக்காமல் வந்திந்த
ஆடரங்கில் ஆடெடியோ!

ஊனையும் இம் மீனையுந்தான்
உண்ண முடியவில்லை!
மானே நீ இல்லாது
மதுவும் வெறிக்குதில்லை''

போதை தலைக்கேறிப்
போனவராய்க் கூவுகிறார்!

மாதவள், ஏ ரோடிவந்து
மகளுக்குக் கண்காட்டி

பாதி அடிபெயர்த்துப்
பரதமிட ஆணையிட்டாள்!

ஆணை கிடைத்தவுடன்
அழகி அடி பெயர்த்தோர்
வீணை நடந்ததென
விழிகளிடை ஏறிவந்தாள்.

'செம்பவளச் சீறடிகள்
சிவக்க நடனம் இடத்
தம் பலப் பூச்சி ஒன்று
தாவி வரும்.' என்பவரும்,

'மான் ஒன்று மீன் ஒன்று
மங்கை விழி தான்' என்றும்
'தேன் ஒன்று பால் ஒன்று,
தேமொழி வாய்ச் சொல்' என்றும்.

வாழைத் தொடை என்றும்,
வறிய இடை என்றும்,
பாலைச் சிரிப்பு என்றும்.
பார்ப்போர் பதை பதைக்கச்
சலோமி. ஏ ரோடியவள்
சந்தமகள் — சொந்தமகள்
கலாப மயில் அனையாள்
கால் தூக்கி ஆடுகிறாள்!
நிலாவை முகமாக்கி
நீள் விழியை அம்பாக்கி
உலாவி வருகின்றாள்
உள்ளம் எனும் மேடையிலே!

குலாவும் அமுதக்
குழம்பைக் குடித்தது போல்
பலரும் எழுந்தல்லோ
பாவையுடன் ஆடுகிறார்!

பாவை சதிராடப்
பார்த்தவர்கள் கண் ஆடப்
பூவையவள் ஏரோடி
புன்னகையில் என்ன சொன்னாள்?
தண்ணுமையை இப்படி ஏன்
தட்டுகிறாள் ஏரோடி?
கண்ணுக்குள் வைத்திருக்கும்
களவு வெளிப்படுமா?

வீணை அடாணாவில்
ஆணை தருவதுமேன்?
காணமுடி யாது, ஏதோ
கதைக்கின்றாள் ஏரோடி!

'அட்டட்டோ' என்று அங்கு
அடிக்கும் முழவு அதிர
'வெட்டட்டோ' என்றே
விழிகள் சுழன்றுவரத்
திட்டத்தின் மேல் நின்று,
'தீம் தீம் தத், தீம்!' என்று
சிட்டொன்று நின்று,
சிறகை அடிக்கிறதாம்!

காரோடும் கூந்தல்
சலனை சதிராட ...

ஏரோடி யாளை
    மறந்துவிட்டான் ஏரோதன்!

கோப்பையிலே ஏரோடி
    கொட்டும் மது மண்டி
ஆப்பிட்டே விட்டான்;
    அரைமனிதன் ஆகிவிட்டான்!

'யாப்பிட்ட திட்டம்'
    அதுதான் நிறைவேறக்
கூப்பிட்டு விட்ட
    விறலி, மறலி எனச்
சாப்பிட்டு விட்டாளே
    சதல உயிர்களையும்!

கூப்பிட்டுக் கூப்பிட்டே
    ஏரோதன் கொஞ்சுகிறான்!
ஆப்பிட்டு, அதனை
    அசைந்த குரங்கானான்!

தீப்பந்தம் எல்லாத்
    திசையும் அணைகிறதே!
பூப்பந்தின் மீது ஏன்
    புயல், இடி, மின்னல், மழைதான்!

மின்னல் வெளிச்சமிட
    மேகம் மழைபொழியச்
சின்னச் சலமை
    சிறகை விரித் தாடுகிறாள்!

என்ன இது கூத்தா?
இறுதி நாள் தீ மழையா?
முன்னம் அறியா
முழக்கம் எங்கும் கேட்கிறதே!
அன்னமா? அல்ல எனில்
ஆர் அங்கே ஆடுவதும்?
இன்னும் ஒரு நொடிதான்,
இயமன் வருவதற்கு!

போதை தலைக்கேறிப்
போனதினால் ஏரோதன்
"மாதே சலமை!
மனத்தில் இனிக் கும், மதுவே!
ஈதே பரதம்!
இதுதான் கலை நடனம்!
இன்றைத் தினத்தை நீ
எடுத்துக் கொண் டே, விட்டாய்!
நன்று! நன்று! உன்னுடைய
நடனம் மிக நன்று!
ஒன்றென்ன, நூறென்ன
ஓரா யிரம் என்ன
மன்றத்தில் உள்ளோர்
மகிழ்ந்திடவே நான் தருவேன்,
நல்ல பரிசாக.
நர்த்தனத்தின் நாயகியே!
சொல்லடி நீ சொல்லு
சுளையாம் இதழ் பிரித்து!
நல்ல பரிசாக
நான் உவக்கக் கேள்" எனப்

பேதைச் சலமை அவள்
பிறிதொன்றும் கேளாமல்
''போதிக்க வந்தவராம்
புரட்சித் துறவி அவர்
சஞ்சுவா மின், தலையைத்
தாலமொன்றில் தாரும்'' என்றாள்!

நெஞ்சே அடைத்திட்ட
நிலையில், எமைப் போல், அரசன்
கெஞ்சினான் நின்று அங்கே!
இறுங்கவில்லை யே, சலமை!
கொஞ்சினான் ''முல்லைக்
கொடியே! வடிவழகி!
வெஞ்சிறையில் உள்ளவனை
வெட்டுவது கூடாது!
கொஞ்சம் இளகம்மா!
கூறுவதைக் கேள் அம்மா!
மக்கள் மதிக்கிறவன்
மாமுனிவன் யோவான் பார்!
சிக்கல் மிகச் சிக்கல்
சிரசை அரிகிறதாம்!
தக்க பரிசு, ஒன்று உனக்குத்
தருவேன் நீ கேள் அம்மா!
பாதி அரசாமோ?
பதவி எதுவாமோ?
நீதியாய்க் கேட்டிடுவாய்;
நிச்சயம் நான் தந்திடுவேன்.''
என்றே பசைந்து, அந்த
ஏரோதன் சொன்னாலும்

மன்றத்தில் உள்ளவரை
மௌனத்தில் ஆழ்த்திவிட்டே
தாய் சொல்லைத் தட்டாத
சலமை மிக உரத்தீர்
''நீர் சொல்லைத் தட்டாதீர்!
நான் சொன்ன வன் தலையைத்
தாலம் ஒன்றிலே, வைத்துத்
தாரும்'' என்றே கூவுகிறாள்!
கூவியது மண்டபத்தில்
'கூக் கூ' என்றே, ஒலிக்கக்
கேவல்ந்தான் ஏரோதன்
கெஞ்சுகின்றானே, அவளை!
கோல முனிவரனைக்
கொன்றிடவும் கூடாதே!
நாலுபேர் பார்த்திங்கே
நகைத்திடவும் கூடாதே!
என்றபடி யாற்றானே
ஏரோடியாள்பயந்த
கன்றை இரந்திட்டான்
காதல் குருடனவன்!

என்றாலும் அந்தச்
சலமை இளகவில்லை.
குன்றாக நின்றாள்!
''கொடுங்கள் தலையை'' என்றாள்!

காலம் கழிகிறதே!
காவலனின் யோக்கியத்தை
நாலுபேர் பார்த்து
நகைத்திடவும் கூடாதே!

என்று எண்ணி ஏரோதன்,
''எங்கே மழுவர்?'' என்றான்.
கன்றும் சின மழுவர்
'காவலனே ஏவல்' என்றார்.

''போவீர் சிறைக்கூடம்!
புனிதன் எனும் சஞ்சுவாமின்
சிரசை அரிந்திந்தச்
செல்வி கரங்களிலே
பரிசாகத் தான் கொடுப்பீர்''
என்று பணித் திட்டானே!

அந்தந்தோ சேவகர் போய்
அருளப்பர் தன் தலையைப்
பந்தம் அற வெட்டி வந்து
பாவையிடம் தந்தனரே!

தட்டொன்றில் யோவானின்
தலைதன்னைப் பார்த்திட்ட
கெட்டவள், ஏரோதி, மனக்
கிளர்ச்சியுடன் தன்மகளைக்
கட்டித் தழுவிக்
களிப்பு மிகக் கொண்டதுடன்
அஞ்சாது அறம் உரைத்த
அருளப்பர் செந்நாவில்
வஞ்சமகள் ஆணி
அடித்து, அழலைத் தீர்த்திட்ட
கொஞ்சத் தனத்தினையும்
கொடுமையையும் எவ்வாறு
பஞ்சமின்றி நான் தமிழில்
பாடுவன்காண் அம்மானை!

## "ஐயோ குருவே! நீர் ஆருக்குத் தீங்கு செய்தீர்?"

## கொலைக்களப்பட்ட அருளப்பர் சீடர் அழுது அரற்றல்.

பெண்ணால் அறிவிழந்த
 பெருமகனும் ஏரோதன்
கண்ணால் பார்த் திட்டானே
 காமம் அதன் மெய் உருவை?
மாதே மதுவாக
 மண்டிய அவ் ஏரோதன்
பாதகனே ஆகிவிட்டான்!
 பழிபாவம் கட்டிவிட்டான்!
'அந்த மது அதனே
 அருந்தாதே!' என்று சொன்ன
சந்த யுவாம் முனியைச்
 சதிகாரி கொல்வதற்கும்
ஆணையிட்ட பாவந்தான்
 ஆள்பதிக்குச் சேர்ந்ததுவே!
'ஏணை இட்ட பிள்ளை' என
 ஏரோதைத் தாலாட்டி
வென்று விட்டாள் ஏரோடி!
 கொன்று விட்டாள் யோவானை!

அன்று அதனைக் கேள்வியுற்ற
சீடர் அழுது, அரற்றிச்
சென்றார் சிறைச்சாலை:
செய்யவனைக் காணவில்லை.
கொன்றார் சிரம் அரிந்த
குறை உடலைத் தான் கண்டார்:

''சத்தியத்தின் சாட்சி என
ஓர் வேத சாட்சி என
நித்தியத்தைக் கண்டுவிட்டீர்!
குருவே நிலைத்துவிட்டீர்!
பற்றி எரியுது, ஐயோ
பாவியர் எம் நெஞ்சமெல்லாம்!
குற்றுடலைக் காண்பதுதான்
கொடுமை'' என்றே ஓலமிட்டார்.
''தொண்டர் தொழும் சற்குருவே!
தோன்றலே! உம்மைவெட்டி
முண்டம் எனப் போட்டாளே
மூளி அலங்காரி!
''விண் தொடர்ந்த எம் குருவே!
வேதம் அதை ஓதுகிற
கண்டம் அதை வெட்டினளே
கருணை இல்லா ஏரோடி!
பொன் ஆரும் உன் உடலம்
பூ தூளி தான் குளிக்க
மண் ஆணை கேட்டாளே
மானம் இல்லா ஏரோடி!

ஓரி - நரி நாய்கள் இங்கே
உன் உதிரம் தான் குடிக்கப்
பாரில் உனைக் கொன்றுளே
பாதகியாம் ஏரோடி!

செய்யவனே! உன் தலையைச்
சிற்றின்பத் தின்பரிசாய்
கொய்தான்; கொடுத்தானே
கொடியவனும் ஏரோதன்!
ஆட்டப் பரிசாக
அருளாளா! உன் தலையைக்
கேட்கக் கொடுத்தானே
கெட்டவனும் ஏரோதன்!
சொன்ன சொல்லைக் காப்பதற்காய்ச்
சுந்தரியாள் கேட்பதற்காய்
உன்னை வந்து வெட்டினனே
உள்ளம் இல்லா ஏரோதன்!
அரசன் திருந்திடுவான்
என்று, அறிவு சொல்ல வந்தீர்:
சிரசை அரிந்தெல்லோ
சிறுமை புரிந்துவிட்டான்!

கண்டித்தே ஆளும் நற்
கற்பனையைச் சொன்னதற்காய்
முண்டத்தைத் தந்தாளே
மூளி அலங் காரி, அவள்!
ஆ! கொடுமை! மாகொடுமை!
ஆணி தனை எடுத்தே
ஓ! கொடியாள் உன் நாவில்
ஓங்கி அறைந்தாளே!

பாவி! படுபாவி!
    பச்சைக் கொலைகாரி!
நாவில் இருப்பு, ஆணி அதை
    நைய அறைந்தாளே!''
என்று, அரற்றித் தம்குருவை
    ஆசந்தி யிற் கிடத்திச்
சென்றாரே கல்லறைபால்
    செய்ய குரு வைச், சுமந்து!
ஆசந்தி மீது வைத்தே
    அணியாய் நடந்திடுவோர்
நேச்ந், த லைக் கொண்டே
    நெக்குருகித் தாம் அழுதார்.
''ஐயோ குருவே! நீர்
    ஆருக்குத் தீங்கு செய்தீர்?
குய்யோ! முறையோ!
    எனக் கதற வைத்துவிட்டீர்!
பாசந்த லைக் கொண்ட
    எம்பாது காவலனே!
ஆசந்தி மீதுவந்தே
    அதற்குள் உறங்கிவிட்டீர்!
அன்புற்ற சீடர்கள் நாம்
    அசையாது, இருக்கையிலே
துன்புற்று நீரும் அங்கே
    துடிதுடித்துச் செத்த தென்ன?
நாணிலத்து மீட்பர் வரும்
    நாட்பார்த்துச் சொன்னவரே!
போனபொழுது எங்களுக்குச்
    சொல்லாமல் சென்ற தென்ன?

தண்ணீரா லே, எமக்குத்
    தந்தீர் அருள் முழுக்கு!
கண்ணியனே! அக்கரங்கள்
    கட்டையாய்ப் போன தென்ன?
மீட்பருக்குச் சாட்சி சொன்ன
    மேலவனே! உன்குரலைக்
கேட்பதினி எக்காலம் ...
    கீழோரை மேம்படுத்தப்
பாலை வன மிருந்து
    பார்த்து வழி நடந்த
காலை எடுத்து, எம்முடைய
    கண்களிலே ஒற்றுேமோ?
வல்ல பரன் மைந்தனுக்கு
    வரவேற்புச் சொன்னவரே!
கல்லறையில் உன்னுடலை
    நல்லடக்கம் செய்வம்'' என
வேதனையில் நின்றழுதோர்
    வெட்டி வைத்த கல்லறையில்
பூதவுடல் தான் அடக்கிப்
    போகாது போகையிலே
ஆதரவே அற்றவராய்
    அவலம் மிக அடைந்து
'மேதினியை ஆளவந்த
    மெசியா இவர்' என்று
சஞ்சுவாம் அன்றொருநாள்
    சாட்சி சொன்ன யேசுவிடம்
தஞ்சமெனச் சென்றாரே!
    தாட் பணிந்து நின்றாரே!

"தந்தை இறைவன் அவன்
தண்ணளியாய் வந்துதித்த
மைந்தனே! வந்தனங்கள்.
மாநிலத்தைக் காக்க வந்த
மீட்பனே! இரட்சகனே!
மெசியாவே எம் வணக்கம்.
சூட்சிதான் வென்றதையா!
சுடர் தான் அணைந்ததையா!
கற்பகத்தை வெட்டினரே!
கழுத்தைத் தறித்தனரே!
அற்புதனும் எம்குருவை
அநியாயம்! கொன்றனரே!
அமுத சுரபியைத்தான்
அவர் போட்டு உடைத்து விட்டார்.
நமது குருவை அவர்
நன்றி இன்றிக் கொன்றுவிட்டார்.
தமது உடலின் ஆசையினால்
தபசியினைக் கொன்று விட்டார்.
உமது சமுகத்தில்
உரைத்திட நா ஏவுதில்லை.
தம்பி பிலிப்புடைய
தாரத்தைத் தான் கவர்ந்த
நம்பி அவன் ஏரோதை
நம் குருவாம் யோவானர்
கண்டித்துப் போட்டாராம்!
கன்று சினத் தால், அவனை
அண்டி வந்த ஏரோடி
அருளப்ப ரின், தலையைத்

துண்டித்துப் போட்டாளே
    துரோகத் தனமாக!
மண்டியிட வே, மறுத்து
    மறியல் தனில் இருந்த
வீரத் துறவி தலை
    வெட்டியதும் போதாமல்,
பாரே பரிகசிக்கப்
    பாவி, அவர் நாவினிலும்
ஆணி அடித்தாளாம்!
    ஆ! கொடுமை! மா கொடுமை!

மாணும் எங்கள் சற்குருவை
    மாநிலத்தில் நாம் இழந்து
காணும் துயரந்தான்
    கடலிற் பரந்ததையா!
வானில் உயர்ந்ததையா!
    வண்ணன் - அருள் வண்ணன்

கானில் இருந்து வந்து
    காதலுடன் எங்களுக்கு
ஞானமுழுக்கு ஆட்டி, அருள்
    ஞானம் தணைப்புகட்டும்
மானவனை ஈனமென
    மாதவள்தான் கொன்றுளே!
வீழ்துக்கள் நாம் இருக்க
    ஆலை அவள் வெட்டிவிட்டாள்!

நீள்துயரால் வந்தடைந்தோம்
நின்னைச் சரணம் என''
என்றே அழுதரற்றிச்
சென்றாரே சீடர் எலாம்!

'குன்றே அனைய யுவாம்
கொண்டிருந்த ஆன்மாவோ
தன்னைப் படைத்தவனின்
தாளை அடைந்தது காண்!
மின்னைப் பழித்த மணி
முடியை அணிந்தது காண்!
பொன்னைப் பழித்த அணித்
தவிசில் அமர்ந்தது பார்!'
என்றே விசுவசித்து, என்
இருகரமும் நான் குவித்தேன்.

'முத்திக் கொலுவிருக்கும்
மோனமுனி சஞ்சுவாம், தன்
பத்தருக்கா கத், தினமும்
பரமன் திருமகனை
வேண்டி அருள் தந்திடுவார்'
என்றே விசுவசித்து, என்
ஊரார் உலகோரே!
உற்ற சஞ்சு வாம் முனியின்
சீர் பாடிப் பேர் பாடி
சேவடியைத் தாம் நாடி,

( ஆற்றுப்படை )

அல்லைப்பிட் டிப் பதியை
அடைவோம்; வணங்கிடுவோம்.
தொல்லைப் பட் டோர்க் கெல்லாம்
துன்பம் அது தீரும் எனப்
பல்கலையும் ஓங்கும் எனப்
பாடு செழிக்கும் எனச்
நல்ல மழை பெய்யும் என
நாடு செழிக்கும் என
சொல்லுதமிழ் அம்மானை
'சுகம்' ஆய் முடித்திடுவேன்

( மங்களம் )

வல்லபனே மங்களங்கள்!
வானவரே மங்களங்கள்!
எல்லோரும் இன்புற்று
இருக்க நினைத்திடுவோம்
நல்லோரே! மங்களங்கள்!
நற்றமிழே! மங்களங்கள்!

☆

# பாவலவன் சத்தியசீலனின்
# அல்லைப்பிட்டிப்பதி அருளப்பர் அம்மானை

'பாவலவன்' திரு. பா. சத்தியசீலன் பன்முகங்களுடையவர். அவர் ஒரு தமிழ்ப் பண்டிதர்; பயிற்றப்பட்ட ஆசிரியர்; இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரி; குழந்தைக் கவிஞர் என்றெல்லாம் கூறத்தக்க தகுதிகள் வாய்க்கப் பெற்றவர். இவை எல்லாவற்றுள்ளும், கவிஞன் அல்லது பாவலவன் சத்தியசிலன் என்ற முகமே மேலோங்கி நிற்கின்றது. பாவலவன் சத்தியசீலனுடைய குழந்தைக் கவிதைகளை நாடறியும். அவை பல்வேறு சந்தர்ப்பங்களிலே பல பரிசுகள் பெற்றுச் சிறந்தன.

தமிழ்ப் புலவன் ஒருவன் தன்னுடைய ஊரிலேயுள்ள தலத்தினைப் பாடுகின்ற வழக்கம் தமிழ்ப் பாரம்பரியத்திலே இருந்துவருவதொன்றாகும். பாவலவன் சத்தியசீலனும் அப் பாரம்பரியப் பழக்கத்துக்கேற்ப அல்லைப்பிட்டிப் பதியிலுள்ள அருளப்பர் மீது அம்மானை ஒன்று பாடியுள்ளார்.

தமிழிலேயுள்ள அம்மானைகளினின்று வேறுபட்டதாகவும் புத்துணர்வுடைய கவிதைகளைக் கொண்டதாகவும் அவருடைய **அல்லைப்பிட்டிப்பதி அருளப்பர் அம்மானை** என்ற இலக்கிய நூல் அமைகின்றது.

சொற்பஞ்சமில்லாத கவிஞன் சத்தியசீலன். சொற்களைப் பொருட்சுவையும் சந்தச் சுவையும் தோற்றுவிக்கும் வண்ணம் பொருத்திப் பாப்புனைவதிலே அவர் கைதேர்ந்தவர். கவிஞனின் இச்சிறப்பியல்புகளுக்கு **அருளப்பர் அம்மானை** நூல் மேலுமொரு சான்றாகின்றது.

தமிழன்னையின் கவிதை அணிகலன்களுக்கு இன்னுமொரு தக்க நல்ல அணிகலனாக **அருளப்பர் அம்மானை** இலக்கியத்தைப் பாவலவன் சத்தியசீலன் அளிக்கிறார்.

பேராசிரியர்,
கலாநிதி **அ. சண்முகதாஸ்**

ஸ்ரீ லக்ஷ்மி அச்சகம், 222 (76) ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர்.